காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 15 புதன்கிழமை 31.08.2022 கதிர் 298

**இது ரகசியம் அல்ல!**

ஜப்பானியத் தூதரகம் குப்பைகளை அகற்றப் பயன்படுத்துவதற்கான 'கொம்பக்ட்'ரக வாகனங்கள் நான்கை யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு இலவசமாக வழங்கி, அதற்கான இறக்குமதித் தீர்வைக்குரிய ஒரு ☞ 2

# யாழ். பல்கலை மாணவர்கள் சீனத் தூதுவர் மீது பாய்ச்சல்!

## இலங்கையின் யுத்தக் குற்றங்களை மூடி மறைத்து தமிழரைக் கொச்சைப்படுத்தி செயற்படுகின்றாராம்

### வடக்கு, கிழக்கில் சீன ஆதிக்கத்துக்கும் கடும் கண்டனம்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒகஸ்ட் 31

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை அமர்வு தொடர்பாக இலங்கைக்கான சீனத் தூதுவர், இலங்கையில் தமிழ் சமூகம் மீது சிறீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளுக்கு பொறுப்புக்கூறல் தொடர்பாக இலங்கைக்கு ஆதரவாகவும் பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்தை கொச்சைப்படுத்தும் விதமாக கருத்து வெளியிட்டமையை யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

- யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய நிர்வாகிகள் நேற்று பல்கலைக்கழக ஒன்றிய அலுவலகத்தில் தாம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இதனை அறிவித்தனர். ☞ 11

* வட் வரி 12 இலிருந்து 15 வீதமாக உயர்வு
* ஓய்வு பெறும் வயது மீள 60 ஆகக் குறைப்பு
* 60 ஐக் கடந்தோர் டிசம்பர் 31 இல் ஓய்வில்
* 50 அரச நிறுவனங்கள் மறுசீரமைக்கப்படும்
* பாதிப்புற்ற குடும்பங்களுக்கு ரூ.10 ஆயிரம்
* நாணய நிதியத்துடன் பேச்சுகள் திருப்தி

# ரணிலின் இடைக்கால பட்ஜெட் சமர்ப்பிப்பு



கொழும்பு,ஒக 31

2022 ஆம் ஆண்டின் எஞ்சியுள்ள காலப்பகுதிக்கான இடைக்கால வரவுசெலவுத் திட்டம், ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்று நாடாளுமன்றத்தில முன்வைக்கப்பட்டுள்ளது. ☞ 2

## காலி விபத்தில் ஒருவர் மரணம்

காலி சமுத்திர மாவத்தை பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காலை 6.30 மணியளவில் காலியில் இருந்து மாத்தறை நோக்கி பயணித்த பஸ் ஒன்றும் எதிர் திசையில் இருந்து வந்த லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் பஸ் சாரது ☞ 2

## புளியங்குளத்தில் மிதந்த சடலம்

முல்லைத்தீவு - புளியங்குளதில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மிதந்த நிலையில் பொலிஸாரினால் நேற்று மீட்கப்பட்டுள்ளது. யாருடையது எனவும் அடையாளம் கண்டுள்ளனர்.

குருநாகலை பிறப்பிடமாகவும், பண்டார வன்னியனை பகுதியை வசிப்பிடமாகவும் ☞ 2

மட்டக்களப்பில் இருந்து வந்து திரும்பிய

## பஸ் குடை சாய்ந்ததில் 26 பேருக்குப் படுகாயம்



மட்டக்களப்பில் இருந்து திருமண நிகழ்வுக்கு வந்த தனியார் பஸ் ஒன்று நேற்றுப் பகல் வலப்பனை, ராகலை பிரதான வீதியில் மாவுவ பகுதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணஞ் செய்த 26 ☞ 2

## சீன - யாழ். பல்கலைகளின் ஒப்பந்தம் கைச்சாத்திடுவது நேற்று தள்ளிவைப்பு

யாழ். பல்கலைக்கழகத்துக்கும், சீன விவசாயப் பல்கலைக்கழகத்துக்குமிடையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவிருந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இலங்கை இனப்படுகொலை விவகாரம் தொடர்பில் அண்மையில் இலங்கைக்கான சீனத்தூதுவர் டுவீட்டரில் ☞ 11

## பல்கலை மாணவரின் போராட்டத்தைக் கலைக்க கண்ணீர்ப் புகைக் குண்டு, நீர்த்தாரைப் பிரயோகம்





அரசுக்கு எதிராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தைல் திரண்டிருந்தோரைக் கலைப்பதற்காக பொலிஸாரினால் கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. ☞ 11



காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கோடியே 43 லட்சத்து 26 ஆயிரத்து 466 ரூபா பணத்தையும் தந்தும், 4 ஆண்டு கால நிர்வாகம் அதறகான உரிய அனுமதியைப் பெற முடியாமல் தவித்து, கடைசியில் அந்த வாகனங்களைக் கோட்டை விட்ட விடயம் பெரும் பூதாகரமாகியுள்ளது.

இந்தச் சமயத்தில் மேயர் மணி வண்ணன் கனடாவில். அவரின் வலது கையான மாநகரசபை உறுப்பினர் ஒருவர் அவரைக் காபந்து பண்ணுவதற்காக நேற்று ஒரு செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

அதற்கு வர முன்னர் சிலவிடயங்கள். இந்த வாகனங்கள் நான்கும் ஜப்பான் தயாரிப்பு. அவற்றை அந்த நாடு யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு இல்வசமாக வழங்குகிறது. ஜப்பான் துறைமுகத்தில் வைத்து வாகனத்தை அந்த நாடு ஒப்படைக்கும்.

அதைக் கப்பலில் தருவித்து, உரிய இறக்குமதி தீர்வை செலுத்திப் பெற்றுக் கொள்வது மாநகர சபையின் பொறுப்பு. அந்தச் செலவினத்துக்குத்தான் இந்த ஒரு கோடியே 43 லட்சத்து 26 ஆயிரத்து 466 ரூபா பணத்தையும் தந்தது ஜப்பான்.

யாழ்ப்பாணம் மாநகர சபை அதை ஒப்பேற்றாததால் பொறுத்துப் பார்த்த ஜப்பான் பணத்தைத் திரும்பக் கேட்கிறது.

அதுவும் இந்த வாகனங்களைத் தருவிக்க எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று எழுத்தில் ஜப்பான் தூதரகத்துக்கு மேயர் மணிவண்ணன் கைவிரித்த பின்னர்தான்.

இது தொடர்பில் உடனடியாக தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வெளிநாட்டில் இருக்கும் வடக்கு மாகாண ஆளுநர் தமது செயலாளருக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இதனால் செயலாளர் தனது உத்தியோகத்தர் ஒருவரையும் மாகாண உள்ளூராட்சி அலுவலக உத்தியோகத்தர் ஒருவரையும் மாநகர சபைக்கு நேற்று மாலை அனுப்பியுள்ளார். இவ்விடயத்தை ஒட்டி ஆரம்பம் முதல் இறுதி வரையான சகல ஆவணங்களின் பிரதியையும் அவர்கள் மூலம் வழங்குமாறு செயலாளர் கோரியுள்ளனர். இதற்கமைய அனைத்து ஆவணங்களும் பிரதி எடுக்கப்பட்டுள்ளன. இன்று அவை உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்படும் எனத் தெரிகிறது.

இதேநேரம் இவ்வாறு ஜப்பான் தூதரகம் இணக்கம் தெரிவித்து, அதற்கான வரிப் பணத்தையும் செலுத்திய போதும் அனுமதி பெறுவதில்தான் தடை உள்ளதான விடயம் தற்போது ஓர் ஆண்டாக பதவியில் உள்ள மாகாண பிரதம செயலாளருக்கே ஓரிரு தினங்களுக்கு முன்னர் வரைத் தெரியாதாம்.

இனி அடுத்த விடயங்களுக்கு வருவோம்.

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படும் வாகனங்களுக்குரிய விசேட அனுமதியை நிதி அமைச்சின் வெளிவிவகார வளப் பிரிவிடம் பெற்றுக் கொள்ள வேண்டும். முன்னாள் மேயர் ஆனோல்ட் தலைமையிலான நிர்வாகமும் சரி, இப்போதைய மேயரின் நிர்வாகமும் சரி, தலா இரண்டு வருடங்கள் இந்த விடயத்தை கையில் வைத்து, நிதி அமைச்சில் அதைச் செய்ய முடியாமல் போட்டடித்து இருக்கின்றன என்பதுதான் உண்மை.

தென்னிலங்கைத் தரப்புகளோடும் கொழும்பிலும் விடயங்களை கையாண்டு ஒப்பேற்றும் தந்திரங்கள் அரசியல் தலைமைகளுக்கு இருக்க வேண்டும் என்பது இதற்காகத்தான். வெறுமனே வாய்ச் சவடால் மாத்திரம் நிர்வாகங்களை நடத்துவதற்குப் போதுமானவையல்ல.

தப்பித்தவறி அரசோடு நல்லிணக்கமாக இயங்கும் ஒரு தரப்பு – உதாரணத்திற்கு ஈ.பி.டி.பி. – நிர்வாகத்தில் இருக்கும் சமயத்தில் இந்த உதவி கிடைத்திருக்குமானால் நிதி அமைச்சின் உரிய அனுமதியும் ஆரவாரம் இல்லாமல் வந்திருக்கும் என்று கருத இடமுண்டு.

அடுத்தது நேற்று நடந்த செய்தியாளர் மாநாடு பற்றியது.

அதை நடத்திய மேயர் மணிவண்ணனின் வலது கையான மாநகர சபை உறுப்பினரிடம் இந்த விடயம் தொடர்பான சகல ஆவணங்களும் இருக்கின்றன. எப்படி அவரின் கைக்கு அவை அனைத்தும் போயினவோ தெரியவில்லை.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பணம் செலுத்தி இந்த ஆவணங்களைப் பெற முயன்ற மாநகர சபை உறுப்பினர் ஒருவருக்கு அவை இன்னும் கிட்டவில்லை. அதே நேரத்தில் நேற்று இது குறித்து பதில் மேயரிடமும் விசாரிக்கப்பட்டது. அவருக்கும் எந்த ஆவணம் பற்றிய தகவலும் இல்லை.

'அகப்பை பிடிப்பவன் நம்மால் என்றால் கொஞ்சம் கூடக் கிடைக்கும்' என்பார்கள். மேயர் நம்மாள் என்பதால் அந்த உறுப்பினருக்கு எல்லா ஆவணங்களும் கிட்டி இருக்குமோ என்னவோ...!

- மின்னல் -

## பஸ் குடை சாய்ந்ததில் ....





(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பேர் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனஓ பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பகுதியில் இருந்து உடபுஸ்ஸல்லாவ பகுதிக்கு வந்து அங்கு நடைபெற்ற திருமண நிகழ்வில் கலந்து கொண்டு நுவரெலியா, ராகலை – கண்டி பிரதான வீதி வழியாக திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சாரதிக்கு பஸ்ஸைக் கட்டுப்படுத்த முடியாது போனதால் விபத்து இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர்கள் வலப்பனை வைத்தியசாலையிலும் ரிக்கல்லகஸ்கட வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## ரணிலின் இடைக்கால .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதில் முக்கியமாக அடங்கியிருந்த விடயங்கள் வருமாறு:-

* பொருளாதார மேம்பாட்டுக்காக பல்வேறு மறுசீரமைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றுக்கமைய பொருளாதார வளர்ச்சி வேகத்தை 5 சதவீதத்தினால் அதிகரிக்க முடியும் என எதிர்பார்த்துள்ளோம்.

* பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஏற்கனவே உறுதியளிக்கப்பட்டவாறு நிவாரணங்கள் வழங்கப்படும் .

* அரச வருமானத்தை அதிகரிப்பதற்கான புதிய வேலைத்திட்டங்களை 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தை இலக்காகக் கொண்டு முன்வைக்கவுள்ளோம். அரச வருமானம் அதிகரிக்கும் போது பணத்தை அச்சிட வேண்டிய தேவை படிப்படியாகக் குறைவடையும்.

* இடைக்கால வரவு செலவுத் திட்டத்திற்கமைய 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யுமாறு முன்மொழியப்படுகிறது.

* சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக நிறைவடைந்து வருகின்றன.

* வட் வரி செப்டம்பர் முதலாம் திகதி முதல் 12 வீதத்தில் இருந்து 15 வீதமாக அதிகரிக்கப்படும்.

* அரச உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறும் வயதெல்லை 60 ஆகக் குறைக்கப்படும்.

* அரச துறையில் பணிபுரியும் 60 வயதுக்கு மேற்பட்ட அனைத்து ஊழியர்களும் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதியன்று ஓய்வுபெற வேண்டும்.

* எதிர்காலத்தில் அரச சேவைக்காக இலத்திரனியல் வாகனங்களை மாத்திரம் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை படிப்படியாக முன்னெடுக்கப்படும். தனியார் துறைகளையும் இதனை பின்பற்றுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

* இலங்கை மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் தவிர 50 அரச நிறுவனங்களை மறுசீரமைப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது.

* நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக அரச நிறுவன மறுசீரமைப்பு பிரிவை அமைக்க 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

* மத்திய வங்கி மற்றும் பணம் அச்சிடுதல் குறித்து புதிய சட்டம் அமுல்படுத்த நடவடிக்கை.

* பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிர்வரும் 4 மாதங்களுக்கு மாதாந்தம் 10,000 ரூபா நிவாரண கொடுப்பனவு வழங்கப்படும்.

* மண்ணெண்ணெய் விலை உயர்வினால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு விரைவில் நிவாரணம்.

* சமுர்த்தி பெறுனர்கள், முதியோர் கொடுப்பனவைப் பெறுபவர்கள் மற்றும் நாட்பட்ட நோய்களுக்கான கொடுப்பனவை பெறுபவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவு அதிகரிக்கப்படும்.

* பெரும்போகத்தின் போது உரத்தின் விலை குறைவடையும்.

* நாட்டில் சுமார் 61,000 குடும்பங்கள் உணவு பாதுகாப்பின்றி உள்ளன. அவற்றுக்கு சர்வதேச நிதியுதவியுடன் நிவாரணங்கள் வழங்கப்படும்.

* விவசாயத் துறையில் நிலுவையிலுள்ள கடன்களை தள்ளுபடி செய்ய 350 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு.

* கர்ப்பிணிகளுக்கு தற்போது வழங்கப்படும் கொடுப்பனவிற்கு மேலதிகமாக மேலும் 2,500 ரூபாவை வழங்கத் தீர்மானம்.

* எரிவாயு கையிருப்பினை உறுதிப்படுத்த அதன் இறக்குமதிக்காக 70 மில்லியன் டொலர் ஒதுக்கப்படும்.

* கொவிட் தொற்றினால் தொழிலை இழந்தவர்களுக்கு புதிய தொழில்வாய்ப்புக்களுக்கான பயிற்சியை வழங்க 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

* மலைநாட்டு பகுதிகளிலிருந்து கொழும்பு உள்ளிட்ட நகர்ப்புறங்களுக்கு புகையிரதத்தின் ஊடாக மரக்கறிகளை கொண்டு செல்வதற்கான செயற்திட்டம் நடை முறைப்படுத்தப்படும்.

* கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின் கிளையொன்றை குருநாகலில் நிறுவுவதற்கு முன்மொழியப்படுகிறது.

* வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் இலங்கையில் அவற்றின் கிளைகளை திறப்பதை ஊக்குவிக்கும் வகையில் சட்ட ஒழுங்குமுறைகளை திருத்தியமைக்க நடவடிக்கை.

-நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்காக சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளிடமும் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற சபை நடவடிக்கைகள் இன்று புதன்கிழமை முற்பகல் 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

## புளியங்குளத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொண்ட மூன்று பிள்ளைகளின் தந்தையான கறுப்பையா சேகரன்( வயது 54) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என உறவினர்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

## காலி விபத்தில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த மேலும் பலர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.







# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
# 36 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா
# 06.10.2022, 07.10.2022 மற்றும் 08.10.2022

உயர் பட்டங்கள், பட்டங்கள், மற்றும் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்கள் ஆகியவற்றை தகுதியளிப்பதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா (06.10.2022, 07.10.2022 மற்றும் 08.10.2022 ஆம் திகதிகளில்) நடைபெறவுள்ளது. பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்து 36 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெறத் தகுதியுடையவர்களை 01.09.2022 ஆம் திகதியிலிருந்து 12.09.2022 ஆம் திகதி வரை தமது வேண்டுகோள்களை கீழ்வரும் அறிவுறுத்தல்களுக்கமைய சமர்ப்பிக்குமாறு கோருகின்றேன். மேலதிக விபரங்களுக்குப் பல்கலைக்கழக இணையத்தளம் **www.jfn.ac.lk** இனைப் பார்வையிடவும்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

1. கலாநிதி
2. முதுமெய்யியல்மாணி
3. முது வியாபார நிர்வாகமாணி -2019
4. சூழல் முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி - 2021
5. சுகாதார முகாமைத்துவத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்
6. கல்வியியலில் பட்டப்பின் தகைஷ்மைச் சான்றிதழ் - 2020 (பகுதி நேரம்)
7. கல்வியியலில் பட்டப்பின் தகைஷ்மைச் சான்றிதழ் - 2019 (முழு நேரம்)
8. வைத்தியமாணி சத்திரசிகிச்சைமாணி - 38ஆம் அணி
9. பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்பு - 2020
10. தாதியியல் விஞ்ஞான சிறப்புமாணி - 2019
11. மருந்தகவியல் சிறப்புமாணி - 2019
12. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞான சிறப்புமாணி - 2019
13. விஞ்ஞானமாணி சிறப்பு - 2019
14. பிரயோக விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி - 2019
15. கணனி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி - 2019
16. விஞ்ஞானமாணி - 2019
17. கணனி விஞ்ஞானமாணி - 2019
18. கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி - 2019
19. வியாபார நிர்வாகச் சிறப்புமாணி - 2019
20. வணிக சிறப்புமாணி - 2019
21. வணிகமாணி - 2019
22. வியாபார நிர்வாகமாணி - 2019
23. உயிர்முறைமைகள் சிறப்பு தொழில்நுட்பமாணி - 2019
24. பொறியியல் சிறப்பு தொழில்நுட்பமாணி - 2019
25. சங்கீதத்தில் சிறப்பு நுண்கலைமாணி - 2018
26. சித்திரமும் வடிவமைப்பிலும் சிறப்பு நுண்கலைமாணி - 2018
27. விவசாய விஞ்ஞானமாணி சிறப்பு - 2019
28. சிறப்புக் கலைமாணி - 2019
29. சிறப்புக் கலைமாணி - 2018
30. பொதுக்கலைமாணி - 2018
31. மொழிபெயர்ப்புக் கற்கைகளில் சிறப்புக் கலைமாணி - 2019

**வவுனியா வளாகம்**

1. செயற்திட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவமாணி - 2019
2. வியாபார முகாமைத்துவமாணி (பொது) - 2019
3. சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவ சிறப்புமாணி - 2019
4. கணக்கியல் மற்றும் நிதியியலில் வியாபார முகாமைத்துவ சிறப்புமாணி - 2019
5. மனிதவள முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவ சிறப்புமாணி - 2019
6. வியாபார பொருளியலில் வியாபார முகாமைத்துவ சிறப்புமாணி - 2019
7. தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி - 2019
8. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி - 2019
9. பிரயோக கணிதம் கணிப்பிடலில் விஞ்ஞானமாணி - 2019
10. சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி - 2019
11. கணிணி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி - 2019
12. சூழல் விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி - 2019
13. தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்பு விஞ்ஞானமாணி 2019

**அறிவுறுத்தல்கள்:**

**1. வேண்டுகோள் படிவங்களைச் சமர்ப்பித்தல்**

அனைத்து விண்ணப்பதாரிகளும் **www.jfn.ac.lk** என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தின் ஊடாக வேண்டுகோள் படிவத்தினை **01.09.2022** ஆம் திகதியிலிருந்து **12.09.2022** ஆம் திகதி வரை நிகழ்நிலையாக நிரப்பி விண்ணப்பித்தல் வேண்டும். குறிப்பிட்ட செயல்முறையில் பின்வரும் ஆவணங்களைத் தரவேற்றம் செய்யும் போது ஒவ்வொரு ஆவணமும் 2 MB இற்கு மேற்படாது "Jpeg" அல்லது 'jpg' முறைவடிவில்; இருத்தல் வேண்டும்.

1. பற்றுச்சீட்டு
2. பட்டச்சான்றிதழில் 'பெயரினை உறுதிப்படுத்தும்' விண்ணப்பம்

நிகழ்நிலையில் பூரணப்படுத்தப்பட்ட வேண்டுகோள் படிவத்தினை தரவிறக்கம் செய்து கையொப்பமிட்டு மேற்கூறப்பட்ட ஆவணங்களுடன் இணைத்து **பதிவுத் தபால்** மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு **12.09.2022** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில் **'36 ஆவது பட்டமளிப்பு விழா, (மாணவர் பதிவிலக்கம்:.........)'** எனக் குறிப்பிடவும்.

**அஞ்சல் முகவரி**

**உதவிப் பதிவாளர்/ அனுமதிகள்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**இராமநாதன் வீதி,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.**

**2. கட்டணம் செலுத்தும் முறை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்கிலக்கத்திற்குச் சேரக் கூடியதாக ஏதாவது ஒரு மக்கள் வங்கிக் கிளையில் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். வங்கிப் பற்றுச் சீட்டில் பெயரையும் மாணவர் பதிவு இலக்கத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

| கட்டணம் மற்றும் வங்கிக் கணக்கிலக்க விபரம் | | |
|---|---|---|
| கட்டணம் | பட்டதாரிகள் | பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள் |
| பட்டமளிப்பு விழாக்கட்டணம் | 1200 | 2300 |
| பட்ட மேலங்கிக் கட்டணம் | 1000 | 1200 |
| பட்டச்சான்றிதழ்க் கட்டணம் | 900 | 1200 |
| புகைப்படக் கட்டணம் | 900 | 900 |
| **மொத்தக் கட்டணம்** | **4000** | **5600** |
| **மக்கள் வங்கி கணக்கிலக்கம் (குறிப்பிலக்கம்)** | | |
| நேரில் சமுகமளிப்பவர் | 970000052100308 | 970000082100310 |
| சமுகமளிக்காதவர் | 970000052100340 | 970000082100351 |

பட்டமளிப்பிற்கு நேரில் சமுகமளிப்போரோ சமுகமளிக்காதோரோ பொருத்தமான முறையில் மேலே குறிப்பிட்டவாறு தங்கள் பட்டங்களிற்கு ஏற்றவாறு பொருத்தமான குறிப்பிலக்கத்தை வங்கிப் பற்றுச் சீட்டில் குறிப்பிடவும். மேற்குறிப்பிட்டபடி பொருத்தமான குறிப்பிலக்கம் குறிப்பிடப்படாத எந்த ஒரு பற்றுச்சீட்டும் வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதனைக் குறித்துக் கொள்க.

**குறிப்பு:** பட்டமளிப்பு விழாவிற்கு சமுகமளிக்காது பட்டச் சான்றிதழைப் பெற விரும்பும் பட்டதாரிகள் மேலங்கிக்கான கட்டணத்தையும் புகைப்படத்திற்கான கட்டணத்தையும் செலுத்தத் தேவையில்லை.

**3. பட்டதாரி மேலங்கி**

நேரடியாக சமுகமளித்து பட்டம் பெறுபவர்கள் அவர்களுக்கான பட்டதாரி மேலங்கிகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தின் ஆவணக்காப்பகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். பட்டதாரி மேலங்கி விநியோகம் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

**4. பல்கலைக்கழக நிலுவைகள்**

பல்கலைக்கழகத்திற்கு ஏதாவது நிலுவைகள் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தப்படாதிருந்தால் அவ் விண்ணப்பதாரிக்கு பட்டமளிப்புச் சான்றிதழ் வழங்கப்படமாட்டாது.

மேலதிக தகவல்களுக்கு 021 222 6714 அல்லது **admissions@univ.jfn.ac.lk** எனும் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.

**வேண்டுகோள் படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டிய காலம்: 01.09.2022 இலிருந்து 12.09.2022 வரை**

இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் வேண்டுகோள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**பதிவாளர்**

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சீனப் பயங்கரவாதம்

தன்னுடைய நாட்டின் புவியியல், கேந்திர அரசியல் நலன்களை எட்டுவதற்காகப் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழினத்துடன் சீண்டி விளையாடுகின்றார் இலங்கைக்கான சீன தூதுவர். அதை ஏற்கனவே இப்பத்தியில் சுட்டிக் காட்டி இருந்தோம்.

'சாது மிரண்டால் காடு கொள்ளாது' என்பர். யுத்தத்தின் முடிவின் பின்னர் கடந்த 13 ஆண்டுகளாக தமிழர்கள் சாதுவாக அடங்கிப் போய் இருக்கின்றார்கள்.

அதற்காக, அவர்களின் தாயகத்தில் – வடக்கு, கிழக்கில் – எல்லோரும் வந்து தம்மிஷ்டப்படி மேய்ந்து விட்டுச் செல்லலாம் என்று சில தரப்புகள் கருதி விட்டன போலும்.

அதற்குத் தமிழர்களின் இளஇரத்தம் – யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் – உணர்வுபூர்வமாக நெத்தியடி கொடுத்திருக்கிறார்கள். வடக்கு, கிழக்கில் – தமிழர் தாயகத்தில் – சீன ஆதிக்க அதிகரிப்பைக் கடுமையாக எதிர்க்கும் யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் நிலைப்பாடு அவர்களுடையது மட்டுமல்ல, ஒட்டுமொத்த வடக்கு, கிழக்கு தமிழர்களுடையதும் தான்.

பொருளாதாரத்தில் நலிவடைந்திருக்கும் இலங்கைக்கு கடன்களை வாரி வாரி வழங்கி, கொழும்பைக் கடன் பொறிக்குள் சிக்க வைத்திருக்கும் சீனத் தந்திரோபாயம், அதே போன்ற கயிற்றை – சுருக்கை – வடக்குக் கிழக்குக்கும் விரிக்கின்றது.

அதைப் பட்டவர்த்தனமாகச் சுட்டிக் காட்டி, உரிய பதிலடி தந்திருக்கிறார்கள் யாழ் பல்கலைக்கழகம் மாணவர்கள்.

'தமிழ்ப் பகுதிகளுக்கு வந்து சீனத் தூதர் நேர்மையுடன்தான் உதவிகளை வழங்கினாரா? நல்லூர் முருகனைத் தரிசிக்க தமிழர்களின் பாரம்பரிய உடை உடுத்தி சீன தூதுவர் வந்தமை தமிழர்களை ஏமாற்றும் செயல் எனச் சந்தேகிக்கின்றோம்' – என்ற யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் கூற்று, கொழும்பு அரசை வெற்றிகரமாக அவித்த சீனரின் கடன் பொறி போன்ற தந்திரம், வடக்குக் கிழக்குத் தமிழர்களிடம் அவியாது என்பதற்கான ஒரு குறிகாட்டிதான்.

இவ்வளவு காலமும் உள்நாட்டு அரசியலில் தாம் தலையிடுவதில்லை எனக் கூறிக் கொண்டு பௌத்த, சிங்களப் பேரினவாதத்துக்குத் துணை போன சீன 'டிராகன்' இப்போது இந்தியாவையும் மேற்குலகையும் சாடுவதற்காக உள்நாட்டு அரசியலில் தலையை நீட்டி, தமிழர் தரப்பிடம் குட்டுப்படும் நிலைக்கு வந்திருக்கிறது.

உதவி பெறுவதற்காக சீனரிடம் கையேந்தலாம் என்ற நம்மவர்கள் தரப்பின் சில பிரகிருத்திகளுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் அறிக்கை ஒரு சாட்டை அடிதான்.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி கிடைக்க விடாமல் தடுக்கும் இத்தகைய செயல்களைப் புரியும் தரப்புகளைத் தமிழினத்திற்கு விரோதமான சக்திகளாகவே தமிழர்கள் அடையாளம் காண வேண்டும்.

இலங்கை அரசு புரிந்த பயங்கரவாதத்தை மூடி மறைக்கும் சீனாவின் நடவடிக்கையும் தமிழினத்தின் மீதான பயங்கரவாதத்திற்குத் துணை போகும் செயற்பாடே. இந்தச் சீனப் பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் தமிழினம் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ந்து அதற்கு வழி சமைப்பார்கள் என நம்பலாம்.

# அரசின் முறையற்ற தீர்மானங்களே மின்சார நெருக்கடிக்குக் காரணம்!

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு



இலங்கை மின்சார சபையின் நட்டத்தால் மின்வலுத்துறை பாதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசாங்கத்தின் முறையற்ற தீர்மானங்களின் பிரதிபலனை நாட்டு மக்கள் எதிர்கொள்கிறார்கள். 30 லட்சம் மின்பாவனையாளர்களின் மின்கட்டணம் திருத்தம் செய்யப்படலாம் என முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற மின்கட்டண அதிகரிப்பு மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

2012 ஆம் ஆண்டுக்கு பின்னர் மின்கட்டணம் திருத்தம் செய்யப்படவில்லை,எரிபொருள் விலையதிகரிப்பு மற்றும் மின்னுற்பத்திக்கான செலவு அதிகரிப்பு ஆகிய காரணிகளால் மின்கட்டணம் திருத்தம் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

மின்பாவனைக்கான கேள்வி குறைவடைந்துள்ளதால் தற்போது மின்விநியோக துண்டிப்பு அமுல்படுத்தப்படும் காலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஏழு மாத காலப்பகுதியில் 31 சதவீதமளவில் நீர்மின்னுற்பத்தின் ஊடாகவும்,38 சதவீதம் நிலக்கரி ஊடாகவும்,09 சதவீதம் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் ஊடாகவும் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

மின் பாவனைக்கான கேள்வி வீழ்ச்சியடைந்துள்ளதுடன் பொருளாதார பாதிப்பும் தீவிரமடைந்துள்ளது. எதிர்காலத்தில் மின்பாவனைக்கான கேள்வி அதிகரிக்கும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

2015 ஆம் ஆண்டு டீசல் மாபியாக்களால் பாதிக்கப்பட்டோம். நிலக்கரி மற்றும் எரிபொருள் மாபியாக்கள் அமைச்சினை முறையாக முன்னெடுத்துச் செல்ல இடமளிக்கவில்லை. போராட்டங்களுக்கு மத்தியில் எமது பயணத்தை முன்னெடுத்தோம்.

எமது ஆட்சியில் எரிபொருளின் விலையும், மின்கட்டணமும் குறைக்கப்பட்டன. முறையான விலை மனுகோரலின் பயனை நாட்டு மக்களுக்குப் பெற்றுக்கொடுத்தோம்.

இருப்பினும் தற்போதைய அரசாங்கம் நாட்டு மக்களுக்கு எவ்வித நிவாரனத்தையும் வழங்கவில்லை. தற்போதைய மின்கட்டண திருத்தம் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

குறைந்த மின் அலகைப் பயன்படுத்தும் சுமார் 30 லட்சம் மின்பாவனையாளர்களின் மின்கட்டணத்தில் நிவாரனம் வழங்க முடியும். - என்றார்.

# சிறுவர் மந்த போசனை தொடர்பில் யுனிசெவ்வின் அறிக்கையை அரசு உதாசீனப்படுத்தக் கூடாது!

## திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை

சிறுவர் மந்த போனை தொடர்பில் யுனிசெவ் அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை அரசாங்கம் உதாசீனப்படுத்தக் கூடாது.

இதனை மட்டுப்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படாவிட்டால், அது சிறுவர்களின் எதிர்காலத்தில் பாரதூரமான தாக்கத்தைச் செலுத்தும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

சிறுவர் மந்த போனை அதிகமாகவுள்ள நாடுகளில் உலகலாவிய ரீதியில் இலங்கை ஆறாவது இடத்திலும், ஆசியாவில் இரண்டாவது இடத்திலும் உள்ளது.

யுனிசெவ் அமைப்பு இதனைத் தெரிவித்துள்ளது. இன்று சிறுவர்களின் மந்த போனை எதிர்கால சந்ததியினரின் வளர்ச்சியில் பாரதூரமான தாக்கத்தைச் செலுத்தும்.

எனவே சிறுவர்களின் போாக்கை உறுதிப்படுத்துவதற்கு இலங்கைக்கு ஒத்துழைப்புக்களை வழங்குமாறு யுனிசெவ் அமைப்பு உலக நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அரசாங்கம் இதுவரையில் எந்த நிலைப்பாட்டையும் அறிவிக்கவில்லை. இதனை ஏனைய விடயங்களைப் போன்று அரசாங்கம் உதாசீனப்படுத்தக் கூடாது.

எனவே மந்த போனையால் சிறுவர் மேலும் பாதிப்பதற்கு இடமளிக்காமல் அரசாங்கம் முறையான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும்.

தற்போது மீண்டும் எரிபொருளுக்கான வரிசைகள் ஆரம்பமாகியுள்ளன. கியூ.ஆர். முறைமை ஊடாக வரிசைகளைக் கட்டுப்படுத்துவதற்கு மாத்திரமே அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மாறாக கேள்விக்குரிய எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்படவில்லை.

நாட்டில் சுமார் 80 லட்சம் வாகனங்கள் காணப்படுகின்றன. ஆனால் 60 லட்சம் வாகனங்கள் மாத்திரமே கியூ.ஆர். முறைமையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறெனில் இதுவரையிலும் 20 லட்சம் வாகனங்கள் கியூ.ஆர். முறைமையில் பதிவு செய்யப்படாமலுள்ளன. அவற்றுக்கு எவ்வாறு எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது? ஓட்ஹிஜூடக்களுக்கு வாரத்திற்கு 5 லீற்றர் எரிபொருள் மாத்திரமே விநியோகிக்கப்படுகிறது.

நாட்டில் சுமார் 11 லட்சம் ஓட்டோக்கள் காணப்படுகின்றன. அதற்கமைய ஓட்டோக்களை வாழ்வாதாரமாகக் கொண்ட 11 லட்சம் குடும்பங்கள் காணப்படுகின்றன.

இவற்றுக்கு வாரத்துக்கு 4 லீற்றர் எரிபொருளை வழங்குவது போதுமானதல்ல. எனவே வாரத்துக்கு 10 லீற்றர் எரிபொருளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை கேட்டுக் கொள்கின்றோம்.

தற்போது பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வாரத்துக்கு ஒரு கோடியே 20 லட்சம் டொலர் இலாபமீட்டுகிறது. அதாவது மாதத்துக்கு 4 கோடியே 80 லட்சம் டொலர் இலாபம் கிடைக்கப் பெறுகிறது.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்தீகரிப்பு நிலையத்தின் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் , ஏனைய உப உற்பத்தி விநியோகமும் இனி ஆரம்பிக்கப்படும். ஜெட் எரிபொருள் விநியோகமும் இதன் மூலமே முன்னெடுக்கப்படுகிறது.

ஜெட் எரிபொருள் விநியோகத்தால் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு வருடத்திற்கு 2 கோடியே 50 லட்சம் டொலர் இலாபம் கிடைக்கப் பெறுகிறது. இவ்வாறு இலாபமீட்டும் பிரிவை தற்போது அரசாங்கம் தனியார் துறைக்கு வழங்கத் தீர்மானித்துள்ளது. எரிபொருள் வர்த்தகத்தில் பிரபல குடும்பமொன்றின் அங்கத்தவருக்கே இதனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. - என்றார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியாவில் 'மௌனப் புரட்சியை' ஏற்படுத்தும் மின்சார வாகனங்கள்!

## பிரதமர் நரேந்த்திர மோடி பெருமிதம்

மின்சார வாகனங்கள் நாட்டில் ஒரு 'மௌனப் புரட்சியை' கொண்டு வருகின்றன எனவும், அவை இந்தியாவில் கார்பன் வெளியேற்றத்தைக் குறைக்க உதவும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஞாயிற்றுக் கிழமை தெரிவித்தார்.

குஜராத்தில் உள்ள மகாத்மா மந்திர் மாநாட்டு மையத்தில் இந்தியாவில் சுஸூகி மோட்டார் கார்ப்பரேஷனின் 40 ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், ஹரியானாவிற்கான மாருதி சுஸூகி வாகன உற்பத்தி நிலையத்திற்கும் குஜராத்தில் உள்ள ஹன்சல்பூரில் சுசுகி இவி பேட்டரி ஆலைக்கும் அடிக்கல் நாட்டினார்.

### இந்தியா-ஜப்பான் உறவுகள்

மாருதி – சுஸூகியின் வெற்றியானது வலுவான இந்தியா – ஜப்பான் கூட்டாண்மையையும் குறிக்கிறது என்று பிரதமர் கூறினார்.

"மாருதியின் வெற்றி இந்தியா – ஜப்பான் உறவின்




வலிமைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. கடந்த எட்டு ஆண்டுகளில், இரு நாடுகளுக்கு இடையிலான இந்த உறவு புதிய உச்சத்தை எட்டியுள்ளது," என்றும் அவர் கூறினார்.

மறைந்த ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயையும் இந்தியா – ஜப்பான் உறவுகளுக்கு அவர் ஆற்றிய பங்களிப்பையும் அவர் நினைவு கூர்ந்தார்.

"இரு நாடுகளையும் நெருக்கமாகக் கொண்டுவர அபே பணியாற்றினார். தற்போதைய பிரதமர் (ஃபுமியோ) கிஷிடா அதற்காக மேலும் உழைத்து வருகிறார்" என்று பிரதமர் கூறினார்.

இன்று, குஜராத்திலிருந்து மகாராஷ்டிராவிற்குச் செல்லும் 'புல்லட்' ரயில் முதல் வாரணாசியில் உள்ள ருத்ராக்ஷா மையம் வரை, பல வளர்ச்சித் திட்டங்கள் இந்திய – ஜப்பான் நட்புறவுக்கு எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

இந்த நட்பு என்று வரும்போது, ஒவ்வொரு இந்தியருக்கும் நிச்சயமாக நமது நண்பரும், முன்னாள் பிரதமருமான ஷின்சோ அபேதான் நினைவுக்கு வருகிறார்."

அபேயின் பாரம்பரியத்தை தொடர்ந்து, கிஷிடா இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை முன்னெடுத்துச் செல்வார் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

"அபே குஜராத்துக்கு வந்தபோது, அவர் இங்கு கழித்த நேரத்தை குஜராத் மக்கள் அன்புடன் நினைவு கூர்கின்றனர். இன்று, பிரதமர் கிஷிடா, நமது நாடுகளை நெருக்கமாகக் கொண்டுவர அவர் (அபே) மேற்கொண்ட முயற்சிகளை முன்னெடுத்துச் செல்கிறார்" – என்று பிரதமர் மோடி கூறினார்.

### உமிழ்வைக் குறைத்தல்

2030 ஆம் ஆண்டுக்குள் புதைபடிவமற்ற மூலங்களிலிருந்து ஐம்பது வீத நிறுவப்பட்ட மின் திறனை இந்தியா அடையும் என்று COP-26 (கால நிலை உச்சிமாநாடு) இல் இந்தியா அறிவித்தது என்று பிரதமர் மோடி நினைவு படுத்தினார்.

"சுற்றுச்சூழல் முறைமைகளின் அடிப்படையில் மின்சார வாகனங்களின் விநியோகம் மற்றும் தேவை ஆகிய இரண்டிலும் நாங்கள் விரைவாகச் செயல்பட்டு வருகிறோம். வரியில் தளர்வு முதல் எளிதான கடன் வசதி வரை, மின்சார வாகனங்களின் தேவையை அதிகரிக்க நாங்கள் பணியாற்றி வருகிறோம்" என்று பிரதமர் கூறினார்.

ஆட்டோமொபைல் முதல் உயிரி எரிபொருள் துறை வரை 125க்கும் மேற்பட்ட ஜப்பானிய நிறுவனங்கள் குஜராத்தில் வேலை செய்து வருகின்றன எனவும் அவர் கூறினார்.

"மின்சார வாகனங்கள் இந்தியாவில் ஓர் அமைதியான புரட்சியைக் கொண்டு வருகின்றன. இன்று இந்தியா மின்சார வாகனங்களைக் கூடுதல் வாகனங்களாகக் கருதவில்லை, ஆனால் அவசியமான நடவடிக்கையாகக் கருதுகிறது." என்று அவர் மேலும் கூறினார்.

### எரிசக்தி துறையில் தன்னிறைவு

மேலும், அடுத்த 25 ஆண்டுகளில் எரிசக்தி தேவைகளில் இந்தியா தன்னிறைவாக இருக்க முடிவு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

"அடுத்த 25 ஆண்டுகளில் சொந்தக் காலில் எரி








குஜராத் காந்திநகரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சுஸூகி இவி பேட்டரி ஆலை மற்றும் மாருதி சுஸூகி வாகன உற்பத்தி ஆலைக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் சுசுகி மோட்டார் கார்ப்பரேன் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி ஒசாமு சுசுகி ஆகியோர் கலந்து கொண்டனர்.

சக்தி துறையில் நிற்பதன் மூலம் இந்தியா ஆத்மநிர்பர் (தன்னம்பிக்கை) கொள்ள விரும்புகிறது," என்றும் அவர் கூறினார்.

போக்குவரத்துத் துறை அதை அடைய ஒரு முக்கிய விஷயம் என்றார் பிரதமர்.

மின்சார வாகனங்களுக்கான அட்வான்ஸ்



கெமிஸ்ட்ரி செல் பேட்டரிகளை தயாரிக்க குஜராத் மாநிலம் ஹன்சல்பூரில் உள்ள சுசுகி மோட்டார் குஜராத் எலக்ட்ரிக் வாகன பேட்டரி உற்பத்தி நிலையம் 7,300 கோடி ரூபா செலவில் அமைக்கப்படுகின்றது என சம்பந்தப்பட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

ஹரியானாவின் கார்கோடாவில் உள்ள வாகன உற்பத்தி நிலையம், ஆண்டுக்கு 10 லட்சம் பயணிகள் வாகனங்களைத் தயாரிக்கும் திறனைக் கொண்டிருக்கும், இது உலகின் ஒரே தளத்தில் மிகப்பெரிய பயணிகள் வாகன உற்பத்தி நிலையங்களில் ஒன்றாக மாறும்.

இத்திட்டத்தின் முதற்கட்டம் 11 ஆயிரம் கோடி ரூபா முதலீட்டில் அமைக்கப்படும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் குஜராத் முதல்வர் பூபேந்திர படேலும் கலந்து கொண்டார்.

(மூலம்: ரைம்ஸ் ஒவ் இண்டியா)

# நாற்பது ஆண்டுகளுக்கு முன் திருட்டுப் போன நாகை சிலைகள் இப்போது நியூயோர்க்கில்!

நாகப்பட்டினத்தில் இருந்து, 40 ஆண்டுகளுக்கு முன் திருடப்பட்ட, வெண்கல சிலைகள், அமெரிக்காவில் இருப்பதை இப்போது கண்டு பிடித்துள்ளனர்.

நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை அருகே, பண்ணைத்தெரு என்ற இடத்தில், பண்ணாக பர மேஸ்வரி கோவில் உள்ளது.

இக்கோவில் இருந்து, 40 ஆண்டுகளுக்கு முன், வெண்கல விநாயகர் சிலையை மர்ம நபர்கள் திருடினர். இதுகுறித்து, தற்போது சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரித்து வருகின்றனர். இந்த விநாயகர் சிலை குறித்த குறிப்புகள், புதுச்சேரியில் உள்ள, கலை பொருள்கள் ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ளதாக, பொலிஸாருக்குத் தெரியவந்தது.

அங்குள்ள புகைப்பட தொகுப்பை ஆய்வு செய்த போது, பண்ணாக பரமேஸ்வரி கோவிலில் இருந்து, சோமஸ்கந்தர், சந்திரசேகர அம்மன், தேவி, அஸ்திரதேவர், பிடாரி அம்மன், நடன சம்பந்தர், தேவி என 11 வெண்கல சிலைகள் திருட்டுப் போனமை தெரிய வந்தது. சர்வதேச சிலை கடத்தல்காரர் சுபாஷ் கபூர், (வயது 77) என்பவர், இந்தச் சிலைகளை அமெரிக்காவுக்கு கடத்தியமை தெரியவந்தது.

இந்தச் சிலைகள், அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள ஏல நிறுவனம் மற்றும் அருங்காட்சியகத்திற்கு விற்று இருப்பதும் தெரியவந்துள்ளது. சிலைகளை மீட்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.


விநாயகர் சிலை


தேவி சிலை

# இனவாத முஸ்லிம் அரசியல் தலைவர்களின் தூண்டுதலில் ஜனாதிபதி செயற்படுகின்றாரா?

## செல்வராஜா கஜேந்திரன் சந்தேகம்



தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் ஒரு பகைமையை ஏற்படுத்துவதற்கும், தமிழ் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடும் ஒரு நிலைமையை உருவாக்குவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க ஒரு சில இனவாத முஸ்லிம் அரசியல் தலைவர்களின் தூண்டுதலின் அடிப்படையில் செயற்படுகின்றாரா என்ற சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் சபையில் தெரிவித்தார்.

அமைச்சின் இணையத்தளத்தில் மீண்டும் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் உள்வாங்கப்பட வேண்டும். பதிவாளர் நாயகத்தால் காணிப்பதிவுகளை கல்முனை தெற்கு பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ள கடிதம் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும். கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்துக்குரிய கணக்காளர் நியமனம் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லாவிடின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் வீதியில் இறங்குவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மின்சாரக் கட்டண உயர்வு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

ஒட்டு மொத்த வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்களையும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது. கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக பிரிவு 89 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. 93 ஆம் ஆண்டில் அது பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டது. 30 ஆண்டுகளுக்கு மேலாக அது ஒரு பிரதேசசெயலகமாக செயற்பட்டுவருகின்ற நிலையில் இன்று வரைக்கும் அந்த பிரதேச செயலகத்துக்குரிய கணக்காளர் நியமனம் இடம்பெறவில்லை.

அதற்காக மக்கள் தொடர்ந்தும் போராடிக்கொண்டிருக்கின்ற நிலையில் கடந்த வாரத்திலிருந்து பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தின் 'பிரதேச செயலகம்' என்ற பிரிவிற்குள்ளிருந்து கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தின் பெயர் நீக்கப்பட்டு கல்முனை தெற்கு பிரதேச செயலகத்தோடு உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடு தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையில் திட்டமிட்ட வகையில் ஒரு பகைமையை வளர்க்கின்ற நோக்கத்தோடு மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையாகும்.அமைச்சரவை தீர்மானத்தின் மூலமாக பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டு 30 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வந்த நிலையில் யாருடைய அனுமதியோடு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தின் 'பிரதேச செயலகம்' என்ற பிரிவிற்குள்ளிருந்து கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தின் பெயர் நீக்கப்பட்டது?

தமிழ் மக்களுக்கும்,முஸ்லிம் மக்களுக்குமிடையில் பகைமையை வளர்ப்பதற்காக கடந்த காலங்களில் அரசாங்கம் திட்டமிட்ட ரீதியில் சில செயற்பாடுகளை மேற்கொண்டு வந்துள்ளது. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னர் பிரதமராக இருந்தபோது ஏப்ரல் 21 தாக்குதலுக்கு பின்னர் அவர் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு வழங்கிய ஒரு வாக்குமூலத்திலே தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையில் முரண்பாட்டை உருவாக்குவதற்காக முஸ்லிம் இளைஞர்கள் சிலர் பயன்படுத்தப்பட்டார்கள் என்ற விடயத்தை வாக்குமூலமாக வழங்கியுள்ளார்.

அதேபோன்றதொரு செயற்பாடுதான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்த பின்னரும் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற கேள்வியுள்ளது. ரணில் ஜனாதிபதியாக வந்த பின்னர் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அவரை சந்தித்துள்ளது. அப்போது தாம் இந்த கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் தொடர்பில் பேசியதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் கூறுகின்றனர். அதற்கு பின்னரும் இவ்வாறான விடயங்கள் நடைபெறுகின்றன என்றால் இது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் ஒரு பகைமையை ஏற்படுத்துவதற்கும் தமிழ் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடும் ஒரு நிலைமையை உருவாக்குவதற்கும் ஒரு சில இனவாத முஸ்லிம் அரசியல் தலைவர்களின் தூண்டுதலின் அடிப்படையில் இவ்வாறு செயற்படுகின்றாரா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

பொதுநிர்வாக,உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளத்தின் 'பிரதேச செயலகம்' என்ற பிரிவிற்குள்ளிருந்து கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தின் பெயர் நீக்கப்பட்டமை இனவாத செயற்பாடு. அமைச்சுக்கு பொறுப்பான பிரதமர் தினேஷ் குணவர்தனதான் இந்த நடவடிக்கைக்கு அனுமதி கொடுத்தாரா என அவரிடம் இங்கு கேட்கின்றேன். இது பிரதமராக நீங்கள் செய்யும் காரியமா? இங்கிருக்கும் நீதி அமைச்சரின் கவனத்துக்கும் இந்த விடயத்தை நான் கொண்டு வருகின்றேன்.

தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் பகைமையை ஏற்படுத்தும் இந்த முயற்சி உடனடியாக நிறுத்தப்பட்டு உடனடியாக அமைச்சின் இணையத்தளத்தில் மீண்டும் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் உள்வாங்கப்பட வேண்டும். அதேபோன்று பதிவாளர் நாயகத்தால் காணிப்பதிவுகளை கல்முனை தெற்கு பிரதேச செயலகத்திடம் ஒப்படைக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கடிதம் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும். கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்துக்குரிய கணக்காளர் நியமனம் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றை உடனடியாக செய்யத்தவறினால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தழுவிய ரீதியில் கல்முனை வடக்கு தமிழ் மக்களுக்கு ஆதரவாக அந்த மக்களோடு இணைந்து நீதிகிடைக்கும் வரை வீதியில் இறங்கி போராடவுள்ளோம் என்றார்.

# காணாமல் போனவர்களை தேட புதிய பொறிமுறை பரிந்துரைக்கும் செஞ்சிலுவை சர்வதேசக் குழு!

செஞ்சிலுவை சர்வதேசக் குழு இலங்கையில் காணா மல் போனவர்களின் நிலை மற்றும் அவர்களின் இருப்பிடம் பற்றிய பதில்களை வழங்கும் ஒரு பொறிமுறையை பரிந்துரைத்துள்ளது.

காணாமல் போனவர்களின் குடும்பங்களின் உணர்வுகள், பொருளாதாரம், சட்ட மற்றும் நிர்வாகத் தேவைகளை நிவர்த்தி செய்யும் நாடளாவிய ஆதரவுத் திட்டத்தை, செஞ்சிலுவை சர்வதேசக் குழு இலங்கையில் நடைமுறைப்படுத்துகிறது.

காணாமல் போனோருக்கான சர்வதேச தினமான நேற்று (செவ்வாய்க்கிழமை), ஆயுத மோதல்கள், வன்முறைகள், பேரழிவுகள், மனிதாபிமான அவசரநிலைகள் மற்றும் இடம்பெயர்வு போன்ற காரணங்களால் உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான மக்கள் காணாமல் போயுள்ள அல்லது தங்கள் குடும்பங்களை விட்டுப் பிரிந்திருப்பதை சங்கம் நினைவு கூருகிறது.

தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாதவர்களின் துன்பம், மனிதாபிமான பிரச்சினைகளில் மிகக் குறைந்த கவனத்தையே ஈர்த்துள்ளது.

பெற்றோர், கணவன், மனைவி, குழந்தை அல்லது உடன்பிறந்தோருக்கு என்ன நடந்தது என்று தெரியாமல், குடும்பங்கள் மீது தாங்க முடியாத சுமையை, இந்தத் துன்பம் சுமத்துகிறது.

தொடர்ந்து நம்பிக்கை மற்றும் விரக்திக்கு இடையே துக்கம் அனுசரிக்க முடியாமல் அவர்கள் திண்டாடுகின்றனர் என்று செஞ்சிலுவை சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது.

காணாமல் போன தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிய மக்களுக்கு உரிமை உண்டு. எனவே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கங்கள், பதில்களை வழங்குவதற்கு, செஞ்சிலுவை சர்வதேசக் குழு ஊக்குவிக்கிறது.

இதன் மூலம் காணாமல் போன தங்கள் அன்புக்குரியவர்களின் தலைவிதி மற்றும் இருப்பிடத்தை அறியும் குடும்பங்களின் உரிமை உறுதிப்படுத்தப்படுகிறது.

இது ஒரு முதல் கட்ட மனிதாபிமான நடவடிக்கையாகும். தங்கள் அன்புக்குரியவர்களைப் பற்றிய பதில்களுக்காகக் காத்திருக்கும் குடும்பங்கள், தங்களின் அன்புக்குரியவர்கள் இல்லாததால் உருவாகும் பல உணர்வு , நிர்வாக, சட்ட மற்றும் பொருளாதார சவால்களைச் சந்திக்கப் போராடுகிறார்கள்.

இந்தநிலையில், குடும்ப இணைப்புகள் சீர்குலைவதைத் தடுப்பதற்கும், பிரிந்த குடும்ப உறுப்பினர்களுக்கிடையேயான தொடர்பைப் பேணுவதற்கும், இறந்தவர்களின் சரியான தகவல்களை உறுதி செய்வதற்கும், தேசிய கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும், சர்வதேச சட்டத்தின் கீழ் இருக்கும் கடமைகளுக்கு ஏற்ப தொடர்புடைய வழிமுறைகள் மற்றும் கட்டமைப்புகளை நிறுவுவதற்கும் பாடுபடுவதாக குழு குறிப்பிட்டுள்ளது.

எனவே அதிகாரிகள், சமூகங்கள் மற்றும் ஒட்டுமொத்த சமூகமும் மேற்படி குடும்பங்களின் அவலநிலையை உணர்ந்து, அவர்களின் தேவைகளுக்கு ஆதரவளிக்க வேண்டும் மற்றும் காணாமல் போன தங்கள் அன்புக்குரியவர்களை நினைவு கூருவதற்கு அவர்களுக்குத் துணை நிற்க வேண்டும் என்று செஞ்சிலுவை சர்வதேசக் குழு கோரியுள்ளது.

# அமைச்சுப் பதவியை ஏற்பதற்குத் தயார்!

## தம்மிக்க பெரேரா சம்மதம்

பொருளாதார அபிவிருத்தி தொடர்பான பொறுப்புகளுடன் கூடிய அமைச்சுப் பதவியை ஏற்பதற்குத் தயார் என நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணல் ஒன்றிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்குத் தாம் எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், தற்போதைய நெருக்கடி நிலைமையை நிர்வகிப்பதற்கு அனுமதி வழங்கப்படுமானால் மீண்டும் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொள்வேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# உகண்டா பாதுகாப்பு அமைச்சரை சந்தித்தார் வட மாகாண ஆளுநர்



உகண்டா நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் குஜராத் மாநில தலைமை நீதிபதி அரவிந்தகுமார் ஆகியோரை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா சந்தித்துள்ளார்.

குஜராத்தில்; இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது சிநேகபூர்வமான நல்லெண்ண கலந்துரையாடல் இடம்பெற்றது என ஆளுநர் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# தென்னை அபிவிருத்தி அதிகார சபையே தேங்காய்க்கு தட்டுப்பாட்டுக்குப் பொறுப்பு

நாட்டில் தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டால் அதற்கு தென்னை அபிவிருத்தி அதிகார சபையே பொறுப்பேற்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் அழைப்பாளர் புத்திக டி சில்வா இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு மாதங்களில் 20 லட்சம் தேங்காய்களை பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்வதால் எதிர்காலத்தில் சந்தையில் தேங்காய் தட்டுப்பாடு ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலப்பகுதி இலங்கையில் தேங்காய் உற்பத்தி குறைந்த காலப்பகுதியாக அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே தேங்காய்களை ஏற்றுமதி செய்வதால் எதிர்காலத்தில் சந்தையில் தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கை தொடர்பில் இந்திய அயலுறவு கொள்கையில் சீனக் கப்பலின் விவகாரத்தால் மீளாய்வு அவசியமாகும்!

## வலியுறுத்துகிறது நாடு கடந்த தமிழீழ அரசு

இலங்கை சென்று திரும்பியுள்ள சீனாவின் யுவான் வாங் - 5 கப்பல் விவகாரம், இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை மீளாய்வு செய்ய வேண்டிய உடனடித் தேவையை காட்டுகிறது என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளதோடு, உண்மையில் இலங்கை யாருக்கு விசுவாசம் என்பதையும் இந்த விடயம் வெளிக்காட்டியுள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஒகஸ்ட் 22 ஆம் நாள் இந்தக் கப்பல் இலங்கைத் துறைமுகமான அம்பாந்தோட்டையிலிருந்து புறப்பட்டு விட்டாலும், இந்த விவகாரம் இலங்கை தொடர்பில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் பாதுகாப்பு - இராஜதந்திர நிலையில் கவலையை ஏற்படுத்தியிருந்தது.

99 ஆண்டுகால குத்தகையில் சீனத்தின் கைகளில் அம்பாந்தோட்டைத் துறைமுகம் இருப்பது முக்கியமான மூலோபாய விளைவுகளைக் கருக்கொண்டிருக்கும் நிலையில், பன்னாட்டுச் சட்டம், இறைமை, பொருளியல் அச்சுறுத்தல் ஆகியவை பற்றி ஆய்வு நடத்த பெல்ஜியம் - பிரசெல்ஸில் உள்ள உலகப்புகழ் பெற்ற கடல்சார் சட்டநிறுவனம் ஒன்றை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அமர்த்தியிருந்தது. அந்நிறுவனம் சமர்பித்திருந்த ஆய்வறிக்கையின் அடிப்படையில் யுவான் வாங் - 5 கப்பல் விவகாரம் தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

கப்பல் நிறுத்தப்பட்ட அம்பாந்தோட்டைத் துறைமுகம் இந்தியாவிலிருந்து 5 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. இது சீனத்தின் 99 ஆண்டுக் குத்தகையில் உள்ளது. அமெரிக்க உதவிக் குடியரசுத் தலைவர் மைக் பென்ஸ் 2018 ஆம் ஆண்டு சீனம் பற்றி ஆற்றிய முக்கிய உரையில், அம்பாந்தோட்டை சீனப் படைத் தளமாகக் கூடும் என்று எச்சரித்தார். அம்பாந்தோட்டை இருக்குமிடம் முக்கியமான வணிகத் தடங்களை ஒட்டி இருப்பதும், இந்தியாவுக்கு நெருக்கத்தில் இருப்பதும் மைக் பென்சின் கவலை நியாயம் எனக் காட்டுகிறது.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனத்தின் குத்தகையில் இருப்பது முக்கியமான மூலோபாய விளைவுகளைக் கருக்கொண்டிருப்பதாகும். 2017 ஆம் ஆண்டு, 99 ஆண்டுக் குத்தகை ஒப்பந்தம் ஒப்பமிடப்பட்டதைத் தொடர்ந்து பன்னாட்டுச் சட்டம், இறைமை, பொருளியல் அச்சுறுத்தல் ஆகியவை பற்றி ஆய்வு நடத்த பிரசெல்ஸில் உள்ள புகழ் பெற்ற கடல்சார் சட்ட நிறுவனம் ஒன்றை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அமர்த்தியது. அம்பாந்தோட்டைத் துறைமுகம் ஆசியாவிலிருந்து ஐரோப்பாவுக்குச் செல்லும் முதன்மையான கடல் வழியிலிருந்து 10 கடல்மைல்களுக்குள் முக்கிய அமைவிடம் கொண்டிருப்பது கடல்சார் பட்டுப்பாதையில் அருமையான வாய்ப்பாகிறது. இது வணிக மற்றும் முதலீட்டுத் தூண்களுக்கப்பால் புவிசார் அரசியல் தன்மையும் மூலோபாயம் மற்றும் பாதுகாப்பு வகைப் பரிமாணமும் கொண்டதாகும். சீன அயலுறவுத் துறை அமைச்சர் வாங் லி 2015 இல் சிறிலங்காவை 'கடல்சார் பட்டுப்பாதையில் மிளிரும் முத்து' என்று வர்ணித்தார் என்பதையும் ஆய்வு எடுத்துக்காட்டியது.

2013ஆம் ஆண்டு சீனாவும் சிறிலங்காவும் தங்கள் உறவை மூலோபாயம் வகைக் கூட்டுறவாகத் தரமுயர்த்திக் கொண்டன. இன்னுங்கூட நெருக்கமான கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்புக்கும் உட்கட்டமைப்புத் திட்டங்களில் சீன ஈடுபாட்டைக் கூடுதலாக்குவதற்கும் அழைப்பு விடுக்கும் கூட்டறிக்கையில் ஒப்பமிட்டன. முந்தைய சந்தர்ப்பங்களில் சிறிலங்கா அரசு ஒரு சீன நீர்மூழ்கிக் கப்பல் கொழும்புத் துறைமுக நகரம் வர அனுமதி வழங்கிய போது இந்தியா எதிர்வினை ஆற்றியது.

2016 ஏப்ரல் 7 ஆம் நாள் சீனாவும் சிறிலங்காவும் ஒப்பமிட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை இருநாடுகளும் தம்மிடையே வளர்த்துக் கொள்ள வேண்டிய ஒத்துழைப்புத் துறைகளில் பாதுகாப்பு, இடர்காப்பு தொடர்பான சிக்கல்களையும் குறிப்பிடுவதாக ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது. சிறிலங்கா அதிகாரமளிப்பதைப் பொறுத்து அம்பாந்தோட்டையை இராணுவ நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கான கூறுகள் இந்த உடன்படிக்கையில் உள்ளன எனக் கூறப்படுகின்றன.

ஆயினும் உடன்படிக்கையின் இரசகியத்தன்மை காரணமாக, அம்பாந்தோட்டைத் துறைமுகம் இராணுவப் பயன்பாட்டிலிருந்து முறைப்படி விலக்குப் பெற்றுள்ளதா இல்லையா என்று உறுதியாகத் தெரியவில்லை என ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் பொதுத்தளத்தில் கிடைக்கும் திட்ட ஆவணத்தில் இப்படியொரு கூறு இடம்பெறவில்லை என்று ஆய்வறிக்கை அழுத்தமாகச் சொல்கிறது. ஆனால் உடன்படிக்கையிலோ (வேறு திட்ட ஆவணத்திலோ) இந்தக் கூறு உள்ளபடியே இடம்பெற்றாலும் கூட, சிறிலங்கா நலிந்து மெலிந்து சார்புநிலைப்பட்டிருப்பதால், இப்படியொரு கூறு செயல்திறன்மிக்கதாக இருக்குமா எனபது கேள்விக்குரியதே என ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யுவான் வாங் கப்பலின் வருகையை ஒருமுறை நடக்கும் நிகழ்வாகப் பார்க்க முடியாது. இந்த வருகை அம்பாந்தோட்டை சீனத்துக்கு எதிர்காலத்தில் மூலோபாய வகையில் காலூன்ற வழியமைத்துக் கொடுத்துள்ளது. இந்தியாவின் முன்னாள் அயலுறவுச் செயலரும் பாதுகாப்பு ஆலோசகருமான சிவசங்கர மேனன் 'அம்பாந்தோட்டையில் முதலீடு செய்வதை நியாயப்படுத்த ஒரே வழி தேசிய பாதுகாப்புக் கண்ணோட்டத்தில் மக்கள் விடுதலை இராணுவத்தை உள்ளே கொண்டு வரமுடியும் என்பதே' என்றார்.

### சிங்களத்தின் இந்திய எதிர்ப்புணர்வு

சிறிலங்கா கடுமையான பொருளியல் நெருக்கடியில் சிக்கியிருக்க, இந்தியாதான் கிட்டத்தட்ட 3 ஆயிரத்து 500 கோடி ரூபா நிதி உதவி வழங்கியது. தமிழர்களுக்கு நேராக உதவி அனுப்பும்படி இந்திய பிரதமர் நரேந்திர மோடியையும் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலினையும் தமிழர்கள் கேட்டுக் கொண்டார்கள். இலங்கை அரசுக்கு உதவி செய்யும் போது உதவிக்கு நிபந்தனையாக 1987 ஆம் ஆண்டின் இந்திய இலங்கை உடன்படிக்கையைச் செயலாக்கும் படியும், குறிப்பாக இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களை தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய வதிவிடமாக அங்கீகரிக்கும் படியும் கோர வேண்டும் என்பது தமிழர் கோரிக்கை. ஆனால் இந்திய அரசினர் நமக்குத் தெரிந்த வரை எவ்வித நிபந்தகளைகளும் இல்லாமல் தமது நல்லெண்ணத்தின் வெளிப்பாடாய் நேராக இலங்கை அரசுக்கே தமது உதவியை அனுப்பி வைத்தனர்.


இராஜதந்திர அவதானிகளின் பார்வையில், யுவான் வாங் - 5 கப்பல் வருகையில் முகாமை பெறுவது சீனக் கப்பல் வந்தது என்பதன்று, அதற்கு இலங்கை எப்படி எதிர்வினை ஆற்றியது என்பதே. யுவான் வாங் - 5 வர அனுமதிக்கும் இலங்கையின் முடிவு சில வட்டாரங்களில் நியாயப்படுத்தப்படுகிறது. எப்படியென்றால், சர்வதேசய நாணய நிதியம் (ஐஎம்எவ்) மீட்சியுதவி பெறுவதற்கு, சீனாவிடம் பட்டுள்ள கடனை மீள்கட்டமைக்க அந்த நாட்டுடன் பேச வேண்டும். ஆகவே சிறிலங்கா சீனத்தைப் பகைத்துக் கொள்ள முடியாது. மேலும் சிங்களவரின் ஆதிக்கத்தில் உள்ள சிறிலங்காவின் அதிகார வர்க்கம் கருத்தியலாக சீனத்தின் பக்கம் சாய்ந்துள்ளது என்றும் நியாயப்படுத்துகின்றனர்.

சிங்கள அரசியல் சமூகத்தில் இந்திய எதிர்ப்புணர்ச்சி அதை விடவும் ஆழமாக உள்ளது என்பதே உண்மை. அனைத்து சிங்களக் குழந்தைகளுக்கும் கற்றுத்தரப்படும் தொன்மைக்கால சிங்களப் புராணமாகிய மகாவம்சம் இந்தியர்களைப் படையெடுப்பாளர்களாகச் சித்திரிக்கிறது. இந்தியாவுக்கு எதிராகப் போர் மூண்ட போதெல்லாம், சிறிலங்கா எப்போதுமே இந்துவல்லாத பாகிஸ்தானையும் பௌத்தச் சாய்வுள்ள சீனத்தையுமே ஆதரித்திருப்பது வரலாறு.

1971இல் இந்திய - பாகிஸ்தான் போரின் போது இந்தியாவுக்கு எதிராகப் போர் தொடுக்க சிறிலங்காவின் கொழும்பு வானிலையத்தை பாகிஸ்தான் பயன்படுத்திக் கொண்டது. 1987ஆம் ஆண்டு கொழும்பில் இந்தியாவுக்கு எதிர்நகர்வாக பம்பாய் வெங்காயத்துக்கும் மைசூர் பருப்புக்கும் 'பெரிய வெங்காயம்' என்றும் 'சிவப்புப் பருப்பு' என்றும் பெயர் மாற்றப்பட்டது. இந்திய எதிர்ப்புணர்ச்சி கட்சி எல்லைகளைக் கடந்து பரவி நிற்கிறது. 99 ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை குத்தகைக்கு ஒப்பமிட்டது கோட்டாபய இராஜபக்ஷ ஆட்சியல்ல, 'நல்லாட்சி'யின் தூண்கள் மைத்திரிபால சிறிசேனாவும் ரணில் விக்கிரமசிங்கருமே.

### சீனத்துரும்பு சீட்டு

ஒரே சீனம் என்ற கொள்கையில் சிறிலங்கா உறுதியாக இருப்பதாகவும் அண்மையில் 'நான்சி பெலோசி தாய்வான் பயணம் தொடர்பாக தானாக ஒரு நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளார்' என்றும் அண்மையில் ரணில் கீச்சிடுகை (ருவீட்) செய்ததும் கருத்துரைத்ததும் இந்தக் கட்டத்தில் தேவையற்றது. இது இலங்கையின் சீன ஆதரவுச் சாய்வின் தெளிவான வெளிப்பாடாகும். இந்தியாவிடம் சலுகை பெற சீனத்துடன் மேலும் கூட்டாளியாகும் அச்சுறுத்தலைப் பயன்படுத்தி சிறிலங்கா சீனச் 'துரும்பை' ஆடுகிறது. எப்போதுமே சிறிலங்கா ஒரே நேரத்தில் 'இந்தியக் கறியையும் சீன சூப்பும்' உண்ண விரும்புகிறது. சிறிலங்கா இந்தியாவிடமும் சீனத்திடமும் நட்புக் கொண்டிருப்பதாக எப்போதும் சொல்லிக் கொள்கிறது. 2019 மாவீரர் நாள் அறிக்கையில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கூறியமை போல, சீனத்துக்கும் இந்தியாவுக்கும் போட்டி கடுமையாகும் போது சிறிலங்காவால் இந்த ஆட்டம் ஆட முடியாமற்போகும். யுவான் வாங் - 5 இதைக் காட்டி விட்டது. சிறிலங்காவின் உண்மையான சார்பை அம்பலமாக்கி விட்டது. ஒகஸ்ட் 15 ஆம் நாள் நடந்த இன்னொன்றையும் கவனித்தாக வேண்டும். சீனம் கட்டிக் கொடுத்த பாகிஸ்தானியக் கப்பல் வங்கதேசத்தில் நுழைய அனுமதிக்கப்படாத நிலையில் சிறிலங்காவுக்கு வருகை தர அனுமதிக்கப்பட்டது.



### சிறிலங்கா நட்பு நாடல்ல - தமிழ்நாட்டு சட்டசபை

சிறிலங்கா நட்பு நாடென்று இந்தியாவும் என்றும் பறைசாற்றுகிறது. ஆனால், 2013 மார்ச் 27ஆம் நாள் தமிழ்நாடு சட்டப்பேரவை இயற்றிய தீர்மானம் கூறுவது போல், இந்தியா சிறிலங்காவை 'நட்பு நாடு' என்று சொல்வதை நிறுத்திக் கொள்ள வேண்டிய நேரம் வந்து விட்டது. இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு அறிவுரைக் கழகத்தின் முன்னாள் உறுப்பினர் பிரம்ம செல்லானி கூறியமை போல், 'வங்குரோத்து நிலையில் உள்ள சிறிலங்கா போன்ற ஒரு சிறிய நாடு தனது வணிகத் துறைமுகமாகிய அம்பாந்தோட்டையில் சீன வேவுக் கப்பல் ஒன்றுக்கு வரவேற்பளித்து இராஜதந்திர வகையில் புது டில்லியின் முகத்தில் அறைந்ததாகும். அத்துடன் இந்தச் சம்பவம் இந்தியாவின் சுரத்தற்ற அயலுறவுக் கொள்கையை மட்டுமல்லாமல், தன் மூலோபாய பின்தளத்திலேயே இந்தியாவின் செல்வாக்கு சரிவதையும் நினைவூட்டுவதாக உள்ளது.

### இந்தியாவும் ஈழத்தமிழரும்

இலங்கைத்தீவின் கடலோரத்தில் மூன்றிலிரு பங்கில், குறிப்பாக இந்தியாவுக்கு நெருக்கமான பகுதிகளில், தமிழர்கள் வாழ்கின்றனர். கருத்தியல், வரலாறு, பண்பாடு ஆகிய எல்லா வகையிலும் தமிழர்கள் இந்தியாவுடன் நட்புறவு கொண்டவர்கள். தமிழர்கள் இந்தியப் பெருங்கடலில் இந்தியாவிற்குள்ள நியாயமான நலன்களையும் அறிந்திருக்கின்றார்கள். தமிழ்த் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் 2008 ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரையில், இந்தியாவுடன் தமிழர்கள் நட்புறவு நிலைநாட்ட விரும்புகின்றார்கள் என்று கூறினார். இவ்வழிநின்று நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் 2013 ஆம் ஆண்டு ஒரு லட்சம் மக்களின் பங்கேற்புடன் முரசறைந்த தமிழீழம் சுதந்திர சாசனத்தில் கூறியமை போல், குடியாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிமுறை கொண்ட எல்லாத் தேசங்களுடனும் தமிழீழம் நெருங்கிய உறவுகள் பேணி வரும். இந்திய மக்களுடன் தோழமை காட்டும் வகையிலும், இந்தியப் பெருங்கடல் வட்டாரத்தில் அமைதியும் இடர்காப்பும் காத்து வளர்க்கும் வகையிலும் தமிழீழம் இந்தியாவுடன் சிறப்பு உறவு அமைத்துக் கொள்ளும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் நிகழ்வுபூர்வமான தமிழீழ அரசு நடத்தி வந்த போது, இலங்கைத்தீவு நாட்டின் கடலோரத்தில் கணிசப் பகுதி அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த போது, இராணுவ வல்லமை கொண்ட எந்த சீனக் கப்பலும் சிறிலங்கா வந்ததில்லை என்பதையும் சொல்லியாக வேண்டும்.

இலங்கைத் தீவு தொடர்பாக இந்தியா தன் வெளியுறவுக் கொள்கையை மீள்மதிப்பாய்வு செய்யவேண்டிய உடனடித்தருணமாக இன்றைய சூழல் உள்ளது என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 108**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## மக்களது முன்னைய காலி முகத்திடல் எழுச்சி

இந்தியப்படைகள்மீளப்பெறப்பட்டதன் சில மாதங்களின் பின் ஊடகவியலாளர் ஒருவர் தமிழ் பகுதிகளில் பணியாற்றிய இந்திய இராணுவ அதிகாரி கேணல் ஹரிஹரனிடம் 'இந்திய ஒப்பந்தத்தைக் கையெழுத்திட ராஜீவ் வந்த போது அவர் துப்பாக்கியால் தாக்கப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?' – எனக் கேட்கப்பட்ட போது ஹரிஹரன், 'நாங்கள் இப்போது புதுடில்லியிலிருந்து குடிக்கும் தேனீரை கொழும்பு காலி முகத்திடல் ஹோட்டலில் இருந்து குடித்து காலி முகக் கடல் அலைகளை அனுபவித்து சம்பாசித்துக் கொண்டிருப்போம்' – என்றாராம்.

அந்தத் துப்பாக்கிச் சம்பவத்திலிருந்து இந்தியா விழிப்பாகத் தென்பகுதிகளையும் கவனித்தது. ஒப்பந்தத்திற்கு எதிராக வரக்கூடிய எதிர்ப்புக்களையும் கணக்கெடுக்கத் தொடங்கியது. ஒப்பந்தத்தின் கைச்சாத்திடல் வைபவத்துக்கும், அதன் பின்னர் நடந்த தேநீர் உபசார விருந்துக்கும் பல அமைச்சர்கள் வராதமையும், ஒப்பந்தத்தை ஒட்டி எழுந்த ஊடக அபிப்பிராயங்களும் அவரது அரச மட்டத்திலிருந்த எதிர்ப்புக்களையும் எதிர்க்கட்சிகளின் அங்கலாய்ப்புகளையும் உணர்த்தின.

ஒப்பந்தத்தின் சரத்துக்களை அவர் முழுமையாக அமைச்சரக்குத் தெரியப்படுத்தாதமை, நாடாளுமன்றத்துடன் அது பற்றி கலந்துரையாடாதமை என்பவை ஒருபுறமாக இருக்க, இந்தியப் படைகள் இலங்கைக்கு வருவது பற்றிய தகவல்லங்கையின் பாதுகாப்பு அமைச்சருக்கே தெரியப்படுத்தப்படாமல் அமைச்சர் காமினி திஸநாயக்காவுக்கு மாத்திரமே அறிவிக்கப்பட்டு இருந்தமை பல உட்கட்சிப் பூசல்களுக்கு விதைகள் தந்தது.

இவற்றைப் பகிரங்கப்படுத்தாது, அவசர அவசரமாக ஜே.ஆர். இந்திய ஒப்பந்தத்தை ஏற்றமைக்கும் ஜே.வி.பியின் பிரசாரங்கள் காரணமாக இருந்தன. திம்பு மாநாட்டின் பின் தொடர்ந்த பேச்சு வார்த்தைகளைப் பயன்படுத்தி ஜே.வி.பி. அதனது பிரச்சாரங்களில் இந்தியா பிரபாகரனுக்கு ஆயுதங்களும் பயிற்சிகளும் தருவதாகவும், வெகுவிரைவில் ராஜீவ் தமிழர் தரப்புகளுடனும் ஜே.ஆர். அவர்களுடனும் இணக்கத்தை ஏற்படுத்துவார் என்று அக்டோபர் 1986 இல் இருந்து தொடர்ச்சியாக துண்டு பிரசுரங்களை ஜே.வி.பி. யினர் விநியோகித்து வந்தனர்.



பின்னர் ஜனவரி 1987 முதல் ஜூன் வரை மாதாந்தம் ஒரு துண்டு பிரசுரமும் வெளியானது. அதன் கருத்தாக்கமும் ஜே.ஆரும், ராஜீவும், பிரபாகரனும் சேர்ந்து நாட்டைப் பிரிக்கக் கூட்டங்கள் நடத்துகிறார்கள் என்பதையே திரும்பத் திரும்ப தெரிவித்தன.

ஜே.வி.பி யின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த முற்படுவோர் நாட்டின் சுதந்திரத்திற்கு எதிராகவே இயங்குகிறார்கள், ஜே.வி.பி. முன்னேறுவதைத் தடுப்பது விடுதலைப் புலிகளும் அவர்களது வெளிநாட்டு எஜமானர்களும் எங்களது நாட்டை ஆறையாடுவதாக முடியும் என்பனவாகத்தான் அந்தத் துண்டு பிரசுரங்களின் செய்திகள் இருந்தன.

ஆதலால் மிக மிக சடுதியில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் அவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. ஆயினும் உடனடியாக அதற்கு எதிர்ப்பு கூட்டங்களை ஏற்படுத்தி, மக்களை அணி சேர்த்து, கலகங்கள் விளைவிக்கக் கூடிய திராணி அவர்களுக்கு இருக்கவில்லை. அவர்களின் முக்கிய தலைவர்கள் பலர் தலைமறைவு வாழ்க்கையிலேயே இருந்தனர். அவர்களால் உடனடியாக செய்யக் கூடியதாக இருந்தது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜூலை 29ஆம் திகதி – ஒப்பந்த தினத்தன்று – புறக்கோட்டையில் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் அவர்களது பல்கலைக்கழக மாணவர்களை இணைத்துக் கூப்பாடுகள் போட்டதுதான். பின்னர் நாடளாவிய முறையில் மக்கள் நடத்திய போராட்டங்களுக்கு சில வலிமைகளை ஏற்படுத்தியமைதான்.



ஜே.வி.பி. ஏதும் கட்டமைத்த முறையில் எதிர்ப்புகளைத் தருவதற்கு இடம் தராத விதத்தில் தான் ஜே.ஆரும் அதனை அவசர அவசரமாக முடித்தார்.

ஜே.வி.பியின் கைகளில் வன்முறைகளைப் பெரிய அளவில் நடத்தக்கூடிய ஆயுதங்களும் இருக்கவில்லை. அவர்களின் உபதிஸ்ஸ்வகமநாயக்க ஒப்பந்தத்தின் நான்கு நாள்களுக்கு முன் ஜூலை முப்பதாம் திகதி காலி இராணுவ முகாமை முற்றுகையிட திட்டங்கள் தீட்டி, காலிப் பகுதி அங்கத்தினர்களை தயார் நிலையில் இருக்குமாறும், தான் கொழும்பு சென்றதும் தேவையான உத்தரவுகள் இயக்க கட்டுப்பாட்டாளர்கள் மூலம் வரும் எனவும் தெரிவித்திருந்தார். ஆனால் எதிர்பாராமல் நடந்த இந்திய ஒப்பந்த கைச்சாத்தினால் நிலைமைகள் மாற, ஊரடங்குச் சட்டங்கள் அமலபடுத்தப்பட்ட பட, இந்தச் செய்திகள் சாத்தியமாகவில்லை. அந்தத் தாக்குதலும் நடைபெறாமல் பிசுபிசுத்து போனது.

இன்றைய காலிமுகத்திடல் போராட்டம் அத்தியாவசியப் பொருள்களுக்காக எழுந்த மாதிரி, இலங்கை – இந்திய ஒப்பந்த காலத்திலும் மக்கள் தாங்களாகவே இந்திய ஒப்பந்தத்திற்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தனர். அதை ஜே.வி.பி. தொடங்கவில்லை. தங்களுக்கு முன்னராக மக்களே அதனை கையில் எடுத்தமையை உணர்ந்து மக்களின் அந்தப் போராட்டத்தை வலுப்படுத்த ஜூலை 29 ஆம் தேதி காலி நகரில் மத்தியில் லொறி ஒன்றுக்குத் தீ வைத்து அரச எதிர்ப்பு வன்முறைகள் தென்பகுதியில் வர – வளர – ஊக்கமளித்தனர். மக்களே இந்தப் போராட்டங்களை முன்னெடுத்து நடத்தியமையால் ஜே. விபியினர் ஐ.தே.க. அரசாங்கம் கவிழும் என எதிர்பார்த்தார்கள்.

அதற்கு தங்காலை நாடாளுமன்ற உறுப்பினர் ஜினதாஸ வீரசிங்கவின் கொலையும் மக்களின் அந்த எதிர்ப்பின் கொதி நிலைக்கு ஆதாரமாக விளங்கியது. முதலில் இந்தக் கொலை ஜே.வி.பியினரால் செய்யப்பட்டது எனக் கருதப்பட்டாலும் பின்னர் அது மக்கள் தங்களது உத்வேகத்தில் நடத்தியது என அறியப்பட்டதால் மக்களின் புரட்சிகளாலும், அமைச்சரவைக்குள் இருந்த பிரிவினைகளாலும் ஐக்கிய தேசியக் கட்சி அரசு ஆட்டம் காணுகிறது, கவிழும் என்றே பலர் கணக்கு போட்டனர்.

ஆனாலும் ஜே.வி.பியினரின் அடிப்படை உறுப்பினர்கள் அச்சமயத்தில் இயங்கக்கூடிய வலுவான நிலையில் இல்லை. அவர்களின் இளைய உறுப்பினரான பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்புக் கூட்டங்களில் பங்கு தந்து கொண்டிருந்தாலும் அதில் ஜே.வி.பியின் உத்வேகம் இருக்கவில்லை.

ஜே.வி.பி. இழைத்த தவறுகளை நாளை பார்ப்போம்.

(வளரும்...)



# மஹிந்த ஆட்சியினுடைய நிழல் அரசை நடத்திக்கொண்டிருக்கின்றார் ரணில்!

## தேசிய கடற்றொழிலாளர் ஒத்துழைப்பு இயக்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 31

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மஹிந்த ஆட்சியினுடைய நிழல் ஆட்சியை செய்து கொண்டிருக்கிறாரா என தேசிய கடற்றொழிலாளர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் ஜேசுதாசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்ட வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டை பொருளாதார ரீதியாக முன்னேற்ற தற்போ தைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை விடுத்து, ஆட்சி மாற்றத்துக்காகப் போராடியவர்களைக் கைது செய்வதைக் கைவிட வேண்டும்.

இளைஞர்கள் போராடி ஒரு மாற்றத்தை எதிர்பார்த்து செயற்பட்டு கொடுங்கோல் ஆட்சியை மாற்றி புதிய ஜனாதிபதிக்கான மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கின்றார்கள்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மஹிந்த ஆட்சியினுடைய நிழல் ஆட்சியை செய்து கொண்டிருக்கிறாரா? என்ற கேள்வி காணப்படுகின்றது.

ஜனநாயகம் தொடர்பில் பேசப்படும் போது போராட்டக்காரர்களை கைது செய்தல் செயற்பாடு தொடர்ந்தும் இடம்பெறுகின்றது.

அனைவரும் எதிர்பார்த்தார்கள் ரணில் விக்ரமசிங்க ஆட்சிக்கு வந்தபோது பொருளாதார ரீதியில் மாற்றம் ஏற்படும் என்று, ஆனால் அவ்வாறு இடம் பெறவில்லை.

மக்கள் மீண்டும் தொடர்ச்சியாகப் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வடமாகாண கடற்தொழிலாளர் இணையமும், தேசிய கடற்றொழிலாளர் ஒத்துழைப்பு இயக்கமும் இணைந்து குறிப்பாக கடற்றொழிலாளர்களை பாதிக்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஊடகம் வாயிலாக ஆட்சியாளர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக கடற்றொழிலாளர் சமூகங்களின் கோரிக்கைகளை முன் வைப்பதற்காக கலந்துரையாடி இருக்கின்றோம்.

கடந்த 30 வருட காலமாக யுத்தத்தின் காரணமாக கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதே சுவடுகளை அதே துன்பங்களை சுமந்தவர்களாக தொடர்ச்சியாக வடக்கு கடற்றொழிலாளர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அத்தோடு இந்திய இழுவைமடி பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு வடக்கு கடற்றொழிலாளர்கள் முகம் கொடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே வடக்கு கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசாங்கம் புதிய நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.

## புதிய கைத்தொலைபேசி கொள்வனவு நாட்டில் 80 வீதத்தால் வீழ்ச்சியடைவு!

இலங்கையில் புதிய கையடக்கத் தொலைபேசிகள் கொள்வனவு 80 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக கையடக்கத் தொலைபேசி இறக்குமதியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட சங்கத்தின் தலைவர் சமித் செனரத் இதனை தெரிவித்தார்.

அத்துடன், பழைய கையடக்கத் தொலைபேசிகளின் பழுது நடவடிக்கை 118 வீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இறக்குமதிக்கு அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாடுகளின் பின்னணியில் கையடக்கத் தொலைபேசி துறையும் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சாதாரண கையடக்க தொலைபேசிகளும் பெருந்தொகையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமையால், விலையுயர்ந்த தொலைபேசிகளைக் கொள்வனவு செய்வதை மக்கள் தவிர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எரிக்கப்பட்ட சொகுசு ஹோட்டலின் உரிமையை ஏற்றார் மஹிந்த மகன்!

சிங்கராஜா வனத்துக்கு அருகில் தனக்கு சொந்தமான பங்குதாரர் சொத்து இருப்பதாகவும், அனைத்து சட்ட தேவைகளையும் பூர்த்தி செய்த பின்னரே ஹோட்டல் நிர்மாணிக்கப்பட்டதாகவும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மகன் ரோஹித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், ஏதேனும் தவறுகள் இடம் பெற்றிருந்தால் அதற்கு எதிராக நீதி விசாரணையை ஆரம்பிக்க முடியும் எனவும் ரோஹித ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும், ஹோட்டல் தொடர்பான உண்மையைக் கண்டறியுமாறு அனைத்து தரப்பு போராட்ட இயக்கத்தின் பேச்சாளர் நிரான் விதானகே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உள்ளூர் பத்திரிகையொன்றை மேற்கோள்காட்டி, அந்த உல்லாச விடுதி ரோஹித ராஜபக்ஷவுக்கு சொந்தமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறிய அவர், முறையான வருமானம் இல்லாத ரோஹித ராஜபக்ஷ ஹோட்டலை எவ்வாறு வைத்திருக்க முடியும் என்றும் கேள்வி எழுப்பினார்.

இதனிடையே, நிர்மாணப் பணியின் போது இந்த விடுதி பாரிய சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்தியதாகவும், விடுதியில் இருந்து வெளியேறும் கழிவுநீர் எங்கு செல்கிறது என்பது தொடர்பாகக் கவலையடைவதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியில் பண்டாரகம் அமைப்பாளர் நயனக ரன்வெல்ல தெரிவித்துள்ளார். எனினும், இந்த குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை எனவும் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் தமது பிரிவினர் மேற்கொள்ளும் சட்ட நடவடிக்கையை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் என ரோஹித ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, ரோஹித ராஜபக்ஷவுக்கு சொந்தமான சொகுசு விடுதி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு காலிமுகத்திடல் போராட்டக்களத்தின் குழுவினரால் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரிடம் முறைப்பாடு ஒன்றும் செய்யப்பட்டுள்ளது. சிங்கராஜா வனத்துக்கு அருகில் கொலன்னா, எம்பிலிப்பிட்டிய கொங்கலகந்தவில் அமைந்துள்ள சொகுசு ஹோட்டல் ஒன்று மே 10 அன்று போராட்டக்காரர்களால் தீக்கிரையாக்கப்பட்டது. இந்நிலையிலேயே, அந்த சொகுசு விடுதி ரோஹித ராஜபக்ஷவிற்கு சொந்தமானது என தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## யாழ். பல்கலை மாணவர்கள் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அவர்கள் மேலும் தெரிவித் தலை வருமாறு:-

சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப் பட்ட இனவழிப்பு யுத்தத்தின் போது தமி ழர்கள் அனுபவித்த துன்பங்களை சீனா நன்கு அறிந்திருக்கிறது.

ஐ.நா. சபையின் அறிக்கையின் பிரகா ரம், இனவழிப்பு யுத்தத்தின் இறுதி ஆறு மாத காலப் பகுதியில் மட்டும் 70 ஆயிரத் துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல் லப்பட்டமையோடு நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்களும் சிறுமிகளும் சிறி லங்கா ஆயுத படையினரால் பலாத்காரம் செய்யப்பட்டனர்.

29 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். ஐக்கிய இராச் சியத்தின் வெளிவிவகார அலுவலகத் தின்படி, 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் போர் விதவைகள் தமிழர் பகுதி களில் ஏராளமான துன்பங்களை தொடர்ச் சியாக எதிர் கொண்டு வருகின்றனர்.

யுத்தம் நிறைவடைந்த பின்னரும் வடக்கு, கிழக்கு தமிழர் பகுதிகளில் இலட் சக்கணக்கான சிறிலங்கா படையினர் எமது தாயக பூமியை ஆக்கிரமித்து நிற் கின்றனர்.

யுத்தத்தின் பின்னர் எமது பாரம்பரிய தாயகத்தில் எம்மை சிறுபான்மை ஆக் குவதற்காக சிங்கள, பௌத்த மக்களை குடியேற்றுவதற்கு எமது பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுகின்றது.

இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பாரப்படுத்துவதன் மூலம் ஐ.நா மனித உரிமைகள் பேரவை யில் நீதியைப் பெறுவதே எமக்கு இருக் கும் ஒரே நம்பிக்கை. நேற்றைய தினம் தான் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் கள், அரசியல் கட்சிகள், மதத் தலைவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும் பங்கள், சிவில் சமூகம், தொழிற்சங்கங் கள் மற்றும் நாம் கூட்டாக இணைந்து இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்திற்கு பரப்படுத்துமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு கடிதம் அனுப்பியிருந்தோம்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்குமாறு ஐ.நா. மனித உரிமை ஆணையத்தை வலியு றுத்தும் கடிதத்தை தமிழர்கள் ஐக்கிய மாக அனுப்பிய அதே நாளில், சீனத் தூது வர் ஐ.நா . மனித உரிமைகள் பேரவை யில் இலங்கைக்கு ஆதரவாக டுவீட் செய் துள்ளார்.

ஐ.நா. மனித உரிமை பேரவையில் இங்கிலாந்து, இந்தியா, அமெரிக்கா, ஜேர் மனி உட்பட பல நாடுகள் தமிழ் மக்களுக்கு ஆதரவாக ஒன்றிணைந்து செயற்பட்டு வரும் நிலையில் சீனத் தூதரகத்தின் குறித்த கருத்தானது இலங்கையில் தமது ஆதிக்கத்தை பலப்படுத்துவதற்கு இலங்கை அரசை போற்றுவதாக அமைகிறது. தமிழ் மக்கள் விரோத மனப்பான்மை கொண் டுள்ள சீனாவின் ஆதிக்கம் வடக்கு கிழக்கில் அதிகரித்து வருவதை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

பல தசாப்தங்களாக பாதிக்கப்பட்ட தமி ழராகிய நாம் சீன தூதுவரின் பொறுப்பற்ற இந்த டுவீட் குறித்து நாங்கள் மிகவும் வேதனையடைவதுடன் இதனை வன் மையாக கண்டிக்கிறோம். இச்செய் கையானது மரத்தால் விழுந்தவனை மாடு மிதித்தது போல் உள்ளது.

ஆகவே இலங்கைக்கான சீன தூதரகம் தாங்கள் டுவிட்டரில் வெளியிட்ட உள்ள டக்கத்தை திரும்பப் பெறுமாறு சீனத் தூதரை நாங்கள் வலியுறுத்துவதுடன், மேலும் வரவிருக்கும் ஐ.நா மனித உரிமை கள் பேரவை அமர்வில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கும் எங்கள் அழைப்பை ஆத ரிக்குமாறும் அவரை வலியுறுத்துகி றோம்.

சீனத் தூதுவர் தமிழ்ப் பகுதிகளுக்குச் சென்று நேர்மையுடன் உதவிகளை வழங்கினாரா எனக் கேள்வி எழுப்பு கின்றோம். நல்லூர் முருகன் கோவிலுக்கு நீங்கள் தமிழர் பாரம்பரிய உடையுடுத்தி வருகை தந்தது தமிழர்களை ஏமாற்றும் செயலா என்று நாங்கள் சந்தேகிக்கிறோம்.

நீங்கள் ஒரு பொறுப்புள்ள நாடாகச் செயற்படுவீர்கள் என்று நாங்கள் எதிர் பார்க்கிறோம், மேலும் எங்கள் குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க வேண்டாம் என் றும், எங்கள் துன்பத்தைப் பயன்படுத் திக் கொள்ள வேண்டாம் என்றும் கேட் டுக்கொள்கிறோம்.

மீண்டும் ஒருமுறை, யாழ்.பல்கலைக் கழக தமிழ் மாணவர் ஒன்றியமாக நாங்கள் சீனத் தூதரின் டுவீட்டை மீளப் பெறுமாறும் பெறுமாறும், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரப்படுத்துவத்துக்கான எங்களின் அழைப்பை ஆதரிக்குமாறும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தமிழர்களைக் கொன்றவர்கள் மற்றும் தமிழ்ப் பெண்களை பலாத்காரம் செய்த வர்களையும் ஆதரிக்கக் கூடாது என வலியுறுத்துவதோடு ஐ.நா. வில் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கும் நேச நாடு களை திசை திருப்ப முயலக் கூடாது என வும் வலியுறுத்துகிறோம். - என்று தெரி வித்தனர்.

## சீன - யாழ். ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துத் தெரிவித்ததை அடுத்து பல் கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட சலசலப்பின் வெளிப்பாடாகவே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு பிற்போடப்பட்டதாக அறியவருகிறது.

மாணவர்கள் மத்தியில் சீனாவுக்கெதி ரான எதிப்புணர்வு காரணமாக மாணவர் ஒன்றியம் நேற்று அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தது.

சீன விவசாயப் பல்கலைக்கழகத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடம் கூட்டு ஆய்வு நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தம் ஒன்றில் நிகர் நிலையில் கைச் சாத்திடுவதற்கான நிகழ்வு நேற்றுக் காலை 10.00 மணியளவில் ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தது.

## பல்கலை மாணவரின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


இதேவேளை, ஆர்ப்பாட்டத்தின் போது 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள் ளார்.

இந்தப் போராட்டத்தை ஒட்டிய பேர ணியால் முன்னதாக மருதானை, டெக் னிக்கல் சந்தியில் வாகன போக்குவரத்துத் தடைப்பட்டது. கடும் வாகன நெரிசலும் ஏற் பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சர் என்ற முறையில் நேற்று இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த சமயத்தில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.







காலைக்கதிர்
Kalaikkathir

# சீன அதிகாரிகளுக்கு நுரைச்சோலை மின் நிலையத்தில் 12 வருடங்களாகப் பெருமளவிலான நிதிச் செலவீனம்!

## உண்மையைப் போட்டுடைத்தார் முஜிபுர் ரஹ்மான்



நுரைச்சோலை அனல் மின்நிலையத்தில் உள்ள சீன நிறுவனத்தின் அதிகாரிகளுக்காக 12 வருடங்களாக பெருமளவு பணம் செலவிடப்பட்டுள்ளன. இந்த செலவுகள் மின்சாரக் கட்டணத்திலேயே உள்வாங்கப்பட்டுள்ளன என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற மின்சார கட்டண உயர்வு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையால் எரிபொருள்இ எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயர்வடைந்துள்ளமையால் பெரும் வாழ்க்கைச் செலவால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் மின் கட்டணத்தை அதிகரித்து மக்கள் மீது மேலும் சுமைகளை அதிகரித்துள்ளனர்.

இதனால் சிறிய மற்றும் பெரிய நிறுவனங்களுக்கான முதலீடுகளுக்கும் பாதிப்பு ஏற்படும். இவ்வாறு மக்கள் மீது சுமைகளைச் சுமத்துவது அநீதியானது. இதனால் மின்சார முகாமைத்துவத்துடன் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

அதிக உணவு பணவீக்கம் உள்ள நாடுகள் பட்டியலில் இலங்கை 5 ஆவது நிலையில் உள்ளது. அத்தியாவசிய அத்தியாவசியமற்ற பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ள நேரத்திலேயே மின்சாரக் கட்டணங்களும் உயர்ந்துள்ளன. இந்த மின்கட்டண அதிகரிப்பால் குறைந்த வருமானமுடைய மக்களுக்கே பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குவதாக அரசாங்கம் கூறினாலும்இ மின் பட்டியல் வரவுள்ளது. ஆனால் இதுவரையில் அரசாங்கம் அது தொடர்பான எந்தவொரு யோசனையையும் முன்வைக்கவில்லை. அத்துடன் இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனால் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருள்களை கொண்டு வர முடியாது உள்ளது.

இந்நிலையில் மின்சாரக் கட்டண அதிகரிப்பாலும் அந்த தொழிற்சாலைகள் வீழும் நிலைமையே உள்ளது. இவற்றை மூடினால் என்னவாகும். நாட்டின் அனைத்து தொழிற்துறைகளுக்கும் அது பாதிப்பை ஏற்படுத்தி நாட்டில் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தும். இதனால் முதலீட்டாளர்களுக்கு நிவாரண முறையில் மின்சாரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் முதலீட்டாளர்கள் வருவதைத் தவிர்க்கும் நிலைக்கே செல்ல நேரிடும்.

மின்சார சபை மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன. குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான அதிகாரிகள் உள்ளன. பெற்றுக்கொள்ள வேண்டிய நிலுவைக் கட்டணங்களும் உள்ளன. அத்துடன் எமது நாட்டைவிட்டு பல்வேறு தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் பொறியியலாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர்.

அதேபோன்று இங்கு இன்னும் சிறந்த பொறியியலாளர்கள் இருக்கின்றனர். அவர்களை நாங்கள் பாதுகாக்க வேண்டும். அதேபோன்று மின்சார சபையை மறுசீரமைப்பு செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாங்கள் இருக்கின்றோம். நிர்வாகத் துறையிலும் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

இந்நிலையில் நுரைச்சோலை அனல் மின்நிலையத்தைப் பராமறிப்பதற்காக 12 வருடங்களுக்கு முன்பிருந்து நாங்கள் இன்னும் சீன நிறுவனமொன்றுக்கு வழங்கியுள்ளோம். ஏன் அவர்கள் எங்கள் நாட்டில் இத்தனை வருடங்களாக இருக்க வேண்டும். அதற்காக பெருமளவு பணத்தைக் கொடுக்கின்றோம்.

எமது நாட்டில் மின்சார பொறியியலாளர்கள் இல்லையா? தொழில்நுட்ப அதிகாரிகள் இல்லையா? இந்த சீன நிறுவனத்துக்காக 12 வருடங்களாக வழங்கிய பணத்தைக் கொண்டு இன்னுமொரு அனல் மின்நிலையத்தை அமைத்திருக்கலாம்.

இதனால் ஏன் சீன நிறுவன அதிகாரிகளை இன்னும் வைத்துக்கொண்டு இருக்கின்றீர்கள் என்று கேட்கின்றோம். இவர்களுக்காகச் செலவிடும் பணமும் இறுதியில் மின்சாரக் கட்டணத்தில் சேர்ந்து பாவனையாளர்களே செலுத்த வேண்டி வந்துள்ளது. – என்றார்.

## மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி நஷீட் இலங்கையின் நிலைமை குறித்து கவலை

இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் நிதி நெருக் கடிதன்னையும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய் சங்கரையும் மிகவும் கவலைய டையச்செய்திருப்பதாக மாலை தீவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான மொஹமட் நஷீட் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண் டிருக்கும் மொஹமட் நஷீட்டுக்கும் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய் சங்கருக்கும் இடையிலான சந்திப்பொன்று திங்கட்கிழமை புதுடில்லியில் நடைபெற்றது.



இந்தச் சந்திப்பின்போது விசேடமாக ஆராயப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய தனது உத்தியோ கபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மாலை தீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருடனான சந்திப்பென்பது வழமைபோன்று மிகவும் சிறப்பாக அமைந்தது. இதன்போது நாம் மாலைதீவு மற்றும் ஏனைய இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகள் முகங் கொடுத்திருக்கும் நெருக்கடிகள் தொடர்பில் கலந்துரையாடினோம்.

குறிப்பாக இலங்கையின் நிதி நெருக்கடி எம்மிருவரையும் கவலையடையச்செய்துள்ளது. அதே வேளை அமைச்சர் ஜெய்சங்கரின் அறிவின் ஆழத்தை க்கண்டு நான் எப்போதும் வியப் படைந் மதிருப்பதுடன் ஈர்க்கப்பட்டிருக்கின்றேன். – என்று அவர் அந்தப் பதிவில் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்குஅவசியமானவெளிநாட்டு உதவிகளை ஒருங்கிணைக்கும் பணிக்குப் பொறுப்பாகக் கடந்த மே மாதம் அப்போது பிரதமராகப் பதவி வகித்த ரணில் விக்ரமசிங்கவால் மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான மொஹமட் நஷீட் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஒரு பெரும் விளையாட்டு துருப்புச்சீட்டாக இலங்கையைப் பயன்படுத்தியுள்ளது சீனா!

கடந்த சில வருடங்களாக சீனாவால் பின்பற்றப்பட்டுவந்த கொள்கையே இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணமாக அமைந் திருக்கின்றது என்று இந்தியா வின் முன்னாள் தேசிய பாதுகாப்புப் பிரதி ஆலோசகர் பங்கச் ஷரன் கடுமையாகச் சாடியுள்ளார்.



இந்திய அதிகாரி கடும் சாடல்

அண்மைக்கால இராஜதந்திர விவகாரங்களை அடிப்படை யாகக் கொண்டு கடந்த வார இறுதியில் மிகவும் காட்டமான கட்டுரையொன்றை வெளியிட்டிருந்த இலங்கைக்கான சீனத்தூதுவர் சி சென் ஹொங் வெளி நாடொன்றின் கப்பலை அதன் கோரிக்கைக்கு அமைவாக அம்பாந்தோட்டைத் துறை முகத்துக்குள் அல்லது வேறு துறை முகத்துக்குள் அனும திப்பது என்பது தமது இறையாண்மைக்கு அமைவாக முற்று முழுதாக இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமேயாகும் என்று அந்தக் கட்டுரையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதுமாத்திரமன்றி எவ்வித ஆதாரங்களுமின்றி பாதுகாப்புசார் கரிசனைகள் என்று கூறிக்கொண்டு வெளியகத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட இடையூறுகள் இலங்கையின் இறையாண்மை மற்றும் சுயாதீனத்தன்மை ஆகியவற்றின்மீது ஏற்படுத்தப்பட்ட தலையீடு என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை என்றும் அவர் அதில் தெரிவித்திருந்தார்.

அதற்குப் பதிலடி வழங்கியிருந்த இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் இலங்கைக்கான சீனத் தூதுவரின் இந்தியா மீதான பார்வை அவரது சொந்த நாட்டின் நடத்தையின் பிரதிபலிப் பாக இருக்கலாம் என்றும் ஆனால் இந்தியா அவ்வாறானதொரு நாடல்ல என்றும் சுட்டிக்காட்டியிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்த விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இந்தியாவின் முன்னாள்தேசியபாதுகாப்புப்பிரதிஆலோசகர் பங்கச் ஷரன் கடந்த சில வருடங்களாக சீனாவால் பின்பற்றப்பட்டுவந்த கொள்கைகளே இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் என்ற உண்மையைக் கருத்திற் கொண்டு இலங்கை மீதான கருணையை வெளிப்படுத்தி இவ்வாறானதொரு அறிக்கையை வெளியிடக்கூடிய தன்மையை சீனா கொண்டிருக்கின்றது என்பது மிக முக்கியமானதாகும் – என்று தெரிவித்துள்ளார்.

மேலும் சீனா ஒரு பெரும் விளையாட்டுக்குரிய துருப்புச்சீட்டாக இலங்கையைப் பயன்படுத்தியிருக்கின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் மிக நீண்டகாலமாகவே இலங்கையுடன் இந்தியா நல்லுறவைப் பேணிவந்திருப்பதுடன் அது எதிர்வருங்காலங்களிலும் தொடரும். எமது அயல்நாடுகளைக் கையாள்வதில் நாம் வேறுவிதமான அணுகுமுறையைக் கொண்டிருக்கின்றோம். என்றும் பங்கச் ஷரன் சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் யாழில் போராட்டம்!




சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தினை முன்னிட்டு யாழில் கவனவீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள யு.என்.எச்.சி.ஆர். அலுவலகம் முன்பாகவே இந்தப் போராட்டம் நேற்று (செவ்வாய்க்கிழமை) முன்னெடுக்கப்பட்டது. அதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் இந்தப் போராட்டத்தில் யாழ். பல்கலைகழக மாணவ பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.08.2022இல் வெளியிடப்பெற்றது.